பிஸமில்லாஹி.

இஃது

அஜாத்அலியுல்லாவவர்கள் மணம்புரிந்த

பப்பாத்தியாரம்மானை.

இதனை

மதுரைமா நகர்

உசைநயினார்குமாரராகிய

செயிதுமீராப்புலவர்பாடியது.

இராமநாதபுரம்-ரவுண்ஷாப்புக்கடை

ப - வெ - முகம்மதுயிபுறாகிம்சாகிபு

பலபிரதிகளைக் கொண்டும்

முகபாடத்தினாலும் பரிசோதித்த பிரதிக்கிணங்கச்

சிந்தாதிரிப்பேட்டை

நாராயணசாமிமுதலியாரவர்களாற்

தமது

பிரபாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டன.

துஈசுர௵-பிப்ரவரிமீ.

உ

பிசுமில்லாகி.

பப்பரத்தியாரம்மானை.

காப்பு.

வெண்பா.

எப்படைப்புந்தான்படைத்த இறையவனேநின்னருளால்
பப்பரத்தியம்மானை பாடுதற்கு - இப்புவியில் *
மக்கத்தனிலுதித்த முகம்மதனார்தன்பொருட்டில் *
ஹக்கனே நீயுதவியாம் *

கடவுள்வாழ்த்து.

மலையுமலைகடலு மற்றுமுள்ளவான்புவியும் *
நிலையாயணியணியாய் நீதியுடனேபடைத்து *
அறுசுங்குறுசு மழுகாளசொர்க்கமெல்லாம் *
வரிசையுடனமைத்த வல்லவனேநின்னருளால் *
செப்பமுடனலியார் சென்றுயெமன்ராச்சியத்தில் *
பப்பரத்தியாரைப் பாங்காமணமுடித்த *
கதையதனைப்பாடுதற்குக் காவலனேகாத்தருள்வாய் *
இதைமனதிலெண்ணவேகனுதவிசெய்வாய் *
ஆதியருளாலே யப்த்துல்லாபெற்றமைந்தர் *
வேதநபிபாதம் மென்மேலும்போற்றிசெய்வேன் *
அன்பிநெறியுடைய அபுபக்கர்பாதமதை *
இன்பமுடன்பணிவே னெப்போதுந்தப்பாமல் *
சாருதனிலுள்ளபடி தன்மகனேவதைசெய்தோர் *
தரணிதனிலுமறுகத்தா தாள்மலரையான்பணிவேன் *
சதுவான்வரிப்பலகை தப்பாமலேயெழுதும் *
உதுமானார்பாதம் ஒருநாளும்யான்மறவேன் *
அறுதினமீண்டுவர வாலநபிதன்கரத்திற் *
திருவாழிவாங்குமலி சீர்பாதம்யான்மறவேன் *
நல்லோனலிபுலியார் மைந்தரசனுசைனார் *
நல்லோர்பதமிரண்டும் நாடோறும்யான்பணிவேன் *

முன்னூற்றிப்பதின்மூன்று முறுசல்நபிமார்கள்பதம் *
என்றும்பணிந்திடுவேனெப்போதுந்தப்பாமல் *
பச்சத்துடனிறையைப் பாங்காய்வணங்குகின்ற *
லச்சத்திருபத்திநாலாயிரம் நபிமார்பதப்பணிவேன் *
ஜெகத்திலுள்ளோர்குபிரகத்தித் தீனைமிகவிளக்கி *
பகுதாதில்வாழும் முகியதீன்தாள்பணிவேன் *
நாகூரில்வாழுகின்ற நல்லதொருமீராவின் *
வாகுடையநல்லமலர்ப்பாதம்யான்பணிவேன் *

அவையடக்கம்.

காரிகைநன்னூற்கள் கற்றபெரியோர்களுடன் *
விரியமாச்செப்பறியேன் மெய்ப்புலவர்தங்கள்முன்னே *
தங்கமலையெதிரே தானுமோராசைவைத்து *
அங்குவிலைசொன்னதுபோ லம்புவியிற்பாடலுற்றேன் *
அந்தமுள்ளநாய னலியார்திருக்கதையை *
சிந்தைமகிழ்ந்து சீர்புவியிற்பாடலுற்றேன் *
கூடல்நகராதிபன் கோமானருளுடையோன் *
ஆடவர்கள்மெய்க்கு மசாராயிதானின்ற *
உற்றபுகழுடைய வுசைநயினார்தன்பாலன் *
சிற்றறிவாலிக்கதையைச் செய்துமீராவுரைத்தேன் *
கோமானருள்பெருகுங் கூறுமக்கமாநகரில் *
தேமாங்கனிபொசித்த செல்வமுகம்மதரும் *
திருமதினமாநகருஞ் சென்றகிஜறத்து *
வருடமோராயிரத்தி னூற்றிருபத்தஞ்சதனில் *
தாரணவருடமதிற் றுஜுடிமாதத்திலே *
பாருலகிற்றேதி பனிரெட்டாநாட்டனிலே *
வெள்ளிக்கிழமைதனில் வியனுகவிக்கதையை *
பள்ளிதனிற்கொத்துபா பரிவாய்த்தொழுதபின்பு *
உமறுப்புலவர்முன்னே உகந்துரைத்தகாவியத்தில் *
சமரிற்புலிகதையைத் தானேதெளிந்தெடுத்து *
இம்மைதனிலே யிறையோனுதவியினால் *
அம்மானையாக அடியேனுன்பாடலுற்றேன் *

மதினநகரத்தில்முகம்மதுநபிவரலாறுகூறல்.

ஆதியருளா லகம்மதிறசூல்நபிக்கி *
வேதமிறங்கி மெய்ப்பட்டந்தானிறங்கி *
பத்தியுடன்வானோர் பணிந்துசலாமுரைத்துக் *
கத்தனிடவான்பரியுங் கட்டுமெட்டாய்த்தானிரக்கி *

துய்யோனருளாலே துல்பக்ருவானுடனே
வெய்யோனொளிபோல விண்ணிரங்கிறபிதனக்குத்
தூதர்சலாஞ்சொல்லித் தூததான்வந்துசொல்ல
நீதமுடனேகலிமா நிச்செயமாய்ச்சொல்லாத
காவர்களைவெட்டிக் கருவறுத்துத்தீனாக்கி
பூவத்துலைத்துப் பயிரோற்றுநாளையிலே

எமன்பதியாளுங் கோவராசன்வரலாறுகூறல்.

எமன்பதிதனிலே யிருக்குங்கோவராஜனுக்கு
சமர்பொருதும்வீரர்களுஞ் சகலதுரைமன்னர்களும்
வாகுடனேகுஞ்சரங்கள் வண்மையுடனாயிரங்காண்
பக்கக்குதிரை பதினாயிரங்களுண்டாம்
மட்டிலடங்காத மற்றுமுள்ளகாற்படைகள்
எட்டுலட்சம்பேர்க ளெண்ணமுடியாது
இப்படியேதாக விருக்குமந்தராஜனுக்குஞ்
செப்பமுள்ளமந்திரிகள் சேர்ந்தபணிவொண்டுமுண்டாம்
சமரினில்வல்லவன்காண் தானிருக்கும்பட்டணந்தான்
எமனென்னும்பட்டணமா மிளவரசாய்த்தானாளும்
கோட்டையறுபதின்காதம் குறிப்பானநீளமுண்டாம்
நாட்டைவளைந்துயிடம் நல்லதொருமுப்பதுண்டாம்
அரசனிருக்கிற வரண்மனையுங்காதவழி
வரிசையுடனரசன் வாழ்ந்திருக்குநாளையிலே
மன்னனிடசீர்மையிலே மான்மறைகள்மெத்தவுண்டு
சொன்னமொழிதப்பாது துய்யோன்பொருட்டாலே
சேர்ந்தவரசனுக்குச் செல்வவெகுநாடுமுண்டாம்
வாய்ந்தநல்லபட்டணமும் வருதாதெனுநாடும்
ஆயமொனும்பட்டணமு மகுதமுதிரநாடும்
மாயருள்ளகிழ்நாடு மற்றுமுள்ளமேல்நாடும்
சீனமெனுநாடுஞ் சேர்ந்தகருநாடுகளும்
கானமுள்ளநாடுங் கருணைவசநாடாம்
அந்தந்தநாட்டிலுள்ள வரசரெல்லாம்வந்துநிதம்
சிந்தைமகிழ்ந்து திறைகள்செலுத்திநிற்க
ஒப்பஞ்செலுத்தி யுலகாளுநாளையிலே
செப்பமுள்ளயெமன்பதியிற் றினமுமறைபொழிய
இறையோனருளா லிருக்குமந்தராஜனிட
தரணியையாளுதற்குத் தானாண்குழந்தையில்லா
பெண்குழந்தையெட்டு பிறந்திருக்குநாளையிலே

அன்னல்மகாராஜனப்போமனஞ்சலித்து *
கோயிலுங்கோபுரங்கள் குளங்கள்மிகவுண்டாக்கி *
ஆயநல்லபுத்திகளையன்பாகத்தான்வணங்கி *

அரசன்மனைவிகெற்பமாகுதல்.

இருக்குமந்தவேளையிலே இறையோனருளாலே *
பெருக்கவரசியர்க்குப் பிள்ளைத்தரித்ததுவே *
அரசனிடதேவியரு மன்பாகச்சூலாகி *
பிரிசமுடனிருந்தாள் பேருலகந்தானறிய *

அந்தநல்லவேளையிலே யரசனுந்தேவியரும் *
சிந்தைமகிழ்ந்து தெளிவாயிருக்கையிலே *
மன்னன்மனஞ்சலித்து மனையைப்பார்த்தேதுசொல்வான் *
உன்னுடையவயற்றி லுதித்ததொருகெற்பமுந்தான் *

ஆண்குழந்தையுண்டானா லன்பாகவைத்திருப்பேன் *
வீண்பிள்ளைப்பெண்ணானா லிணைவெட்டியெறிந்திடுவேன் *
சொன்னமொழிகேட்டணங்கு துயரமுற்றிருக்கையிலே *

வன்னமயிலனையாள் வகைபத்துமாதஞ்சென்று *
வயறுநொந்திருக்கையிலே மருத்துவச்சிக்கேதுசொல்வாள் *
கயல்விழியேமருத்துவச்சிக் கன்னிகையேநீகேளாய் *

ஆண்குழந்தைப்பெற்றேனென்றா லன்பாகநீயிருப்பாய் *
பெண்குழந்தைப்பெற்றேனென்றால் பேருலகிற்றெரியாமல் *
மறைத்திடுவாயாருக்கால் வரிசையதுதருவேனென் *
றுரைத்தமொழிகேட்டு முகந்திருத்தாள்மருத்தவச்சி *

இராசன்மனைவிவயற்றில் பப்பாத்தியார்பிறக்குதல்.

ஏவலர்கள்வாராம விளங்கொடியாள்சூல்கலைந்து *
பாவையொன்றுபெற்றாளே பைங்கிளியாள்மின்னொளிபோல் *
பெண்ணென்றறியாமல் பெரியோனுதவியினால் *
ஆணென்றுசொல்லி யரசனுக்காள்விடுத்தாள் *
தோழியர்களோடிச் சொன்னாராசனிடம் *
ஆழிநெறியில்நின்ற வரசன்மனமகிழ்ந்து *
சர்க்கரையெல்லோர்க்குஞ் சந்தோஷமாய்வழங்கி *
முக்கியமாயெளியோர்க்கு முறையாகத்தானஞ்செய்தார் *
பெண்மயிலாளைப்போர்த்து பெரியோனுதவியினால் *
ஆணென்றுசொல்லி யன்பாகத்தான்வளர்த்தாள் *

பப்பரத்தியார்பள்ளியிலிருக்குதல்.

இந்தப்படிவளர்த்தா ளேழுவயதாகுமட்டும் *
மைந்தனென்றுபள்ளிக்கு வைத்தாரேமன்னவரும் *
பத்துவயதில் படித்து மகிந்தபின்பு *
உற்றசிலம்புவித்தை யுறுதியுடனேபடித்து *
ஆனைகுதிரை யனேகநல்லயேற்றமெல்லாந் *
தானேபடித்துத் தயவாயிருக்கையிலே *

பப்பரத்தியாருக்கு எமன்பதியைமுடிசூட்டல்.

இந்தப்படியிருக்க விராசன்மனமகிழ்ந்து *
மைந்தனுக்குப்பட்டமதுங் கட்டினான்மன்னவனும் *
கட்டினார்பட்டமதுங் கடவுளுதவியினால் *
திட்டமுடன்மந்திரிமார் சேரவேசூழ்ந்திருக்க *
நீதமுடன்ராச்சியத்தில் நெறிநடத்துநாளையிலே *
போதப்புலிபசுவும் பொருந்தியொருதுறையில் *
தண்ணீர்க்குடித்துத் தவனமிளப்பாறும் *
மண்ணினுள்ளமன்னவர்கள்மகிழ்ந்துமிகக்கப்பமிட *
வாழ்ந்திருக்குநாளையிலே வல்லோனமைத்தபடி *
வேந்தனிடகாலஞ்சென்று விண்ணேகிப்போனதன்பின் *
செய்யுங்கருமவிதி செய்தானிளவரசன் *
வையமுழுதாளுமன்னர்களுஞ்சூழ்ந்திருக்க *
ஆதியருளாலே யானவிளவரசன் *
நீதிவயது நிறையப்பதினாறும் *
ஆகுமந்தநாளையிலே யானதொருமந்திரிமார் *
வாகுடனேதானுரைப்பார் மன்னவனேவுன்றகப்பன் *
ஊருக்குமப்பாலே உயர்ந்தமலையதுவும் *
ஆறுகாதமாகு மந்தமலைதன்னுயரம் *
செப்பமுள்ளமலையிற் சேர்ந்தரசன்கொலுவிருந்தார் *
தப்பாமல்நீருமங்கே தானேகொலுவிருக்க *
வாருமென்றுகூப்பிடவு மன்னவனும்போயினரோ *
வீருடனேபோயங்கே வீற்றிருக்குநாளையிலே *

வசுராபதியரசன்வரலாறுகூறல்.

வசுரனெனும்பட்டணத்தில் வாழுமரசனவன் *
அசுரனெனுமரசன் அவனுடையதன்வலிமை *
ஆனையொருலட்சத் தின்மேற்பதினாயிரமாம் *

சேனைப்பெருந்தளங்கள் சேரவேபத்துலட்சம்
காலாட்படைகள் கணக்கிலடங்காதாம்
ஆலமெல்லாம்படைத்த வாதியருளாலே
அதிலேயொருயானைக் காயிரந்தலைகளுண்டாம்
துதிக்கைகளாயிரமாம்சொல்லுமந்தயானைதனைக்

மன்பதிக்கள்ளர்கள்வசுராபதியில்யானைதிருடப்போகுதல்.

கன்னமிடவேணுமென்று கனக்கவொருமுகமாய்
எண்ணியேபதினறுபே ரிசைந்தமெமன்ராச்சியத்தார்
வயதுபதினறுய் வாலப்பிராயமுமாய்
தயவாயொருமுகமாய்த் தானுள்ளபேர்களுமாய்
சேரவொருமுகமாய்த் திரண்டுமங்கேதான்கூடி
பாரமுள்ளயானைதனைப் பாங்காய்க்களவுசெய்ய

அசுரராஜனைக்கள்ளர்காணுதல்

மாவுத்தமார்வேடமாறி வந்தார்வசுராவில்
ஆவலுடன்வந்து மரசனிடந்தான்போனர்
போனவுடன்கண்டு புகழ்பெரியராசனுந்தான்
ஆனைகட்டுமனிதர்களே யாரென்றுதான்கேட்டான்
அப்போதுகள்ள ரன்புடனேதாமுரைப்பார்
இப்போதுநாங்களிருப்பதுவடதேசம்
பாரமுள்ளயானைகட்டும் பாங்கானமாவுத்தர்கள்
தாரமுள்ளராச்சியத்தில்தோன்றியேயவ்விடத்தில்
தலைமுறையதாகத்தான் சேவகமாயிருந்தோம்
நிலைமையாய்மன்னவனும் நிலங்கள்சிலதுவிட்டு
வெகுமானமுள்ளபொருள் வேண்டியதெலாங்கொடுத்துத்
தருமானசேவகத்திற் றாமிருந்தோமின்றளவும்
இப்போதுவும்மிடத்தி லிருக்குமந்தயானைதனை
செப்பமாய்நாங்கள்கட்டச் சேர்ந்துவந்தோமும்மிடத்தில்
சிந்தைமகிழ்ந்துகொண்டு செப்பமுள்ளயானைதனக்கு
பந்தனமாய்ச்சேவகமும் பார்க்கவேநீருரைத்தால்
சேவகமாகவுமிருந்து திரமாகப்பார்த்திடுவோம்
பாவனையாகப் பட்சமுடனென்றுரைக்க
உரைத்தவொருகள்ளருக்கு முற்றவொருசேவகந்தான்
விரைந்துநல்லதென்று வேந்தன்விடைகொடுத்தான்
சேர்ந்தவொருயானையின்மேற் சேவகமுந்தானெழுதி
வர்ந்தவொருகள்ளருக்குவெண்ணிமுடியாத

வெகுமானமற்றதுவும் வெகுசீர்மைதான்கொடுத்தான் *
பகுமானமாகப் பார்த்திருக்கும்வேளையிலே *

அசுரராசன்மேல் வடதேசத்தரசன் படையெடுத்துவந்து யுத்தஞ்செய்யுதல்.

அந்தநாள்தன்னி லசுரனெனும்ராசன்மேல் *
வந்தார்பெரும்படையாய் வடதேசராச்சியத்தார் *
அசுரனெனுமரச னப்போதுமேயதுசெய்வான் *
விசுவாசமந்திரியைவேண்டியேதானழைத்து *
சேனைகளைக்கூட்டுமென்றான் தீரமுள்ளராசனுந்தான் *
வானங்குவித்ததுபோல் வந்ததேதன்படைகள் *
பாயும்புரவிகள்தான் பதினாயிரஞ்சூழ *
வாயுவேகயானைகளும் வந்ததேதான்சூழ *
கண்ணிற்கடங்காதகாலாள்பெருஞ்சேனை *
எண்ணத்தொலையாதேட்டிலடங்காது *
இந்தப்படைகளுட னெழுந்தானரசனுமே *
வந்தவடராச்சியத்தார் வண்ணலட்சஞ்சேனையுடன் *
சுற்றிவளைத்தார்கள் சுழல்காற்றடித்ததுபோல் *
வெற்றிமுரசடித்தார் வீரவடராச்சியத்தார் *
அசுரனெனுமரச னவன்மேற்படையெழுப்பி *
திசைகளதிர்ந்திடவே சேனையுத்தஞ்செய்யலுற்றார் *
எதிர்த்துச்சண்டைசெய்தார்க ளிருவரிடதன்படையும் *
மதிப்பாய்பொருதிட்டார் வல்லோனருளாலே *
அப்போதசுரராச னவனுடையசேனைத்தளம் *
செப்பமுடன்களைத்துச்சேரமடிந்திடவே *
ஆனைபரிசேனை யனேகமடிந்ததுவே *
சேனைப்படைத்தலைவர் சிராய்மடிந்திடவே *
அசுரராசன்முறிந்தோட வப்போதுசேனைத்தளம் *
விசையாகவேசிதறி வெகுதுலவிலோடிடவே *

இமன்பதிக்கள்ளர் யானையைக்கொண்டுபோகுதல்

ஓடிமந்தவேளையிலே யுத்தமதெருகள்ளருந்தான் *
நாடிமந்தயானைதனை நாட்டமுடனேதிருப்பி *
கானல்மலைகடந்து காடுகளுந்தான்கடந்து *
வேனிலனலெரிக்கும் வெட்டிவெளிகடந்து *
கொண்டுயெமன்ராச்சியத்தில்கோல்முள்ளயானைதனை *
சென்றுமலையருகேசேர்ந்தார்களப்போது *

பார்த்தமுள்ளகள்ளர்கள்தான் பரிவாகயானைதனை *
வேந்தனதுமுன்னே விட்டார்களப்போது *

எமன்பதி - பப்பாத்தியரசர் - கள்ளரைக்கண்டு விஞவுதல்.

விட்டவுடல்யானைதனை வேந்தனவன்றான்பார்த்து *
இட்டமுடனிந்தயானை யெங்கிருந்துவந்ததென்றார் *
அப்போதுகள்ள ரரசனுக்குயேதுசொல்வார் *
செப்பமுள்ளதீவில் சென்றுகொண்டுவந்தோமென்றார் *
வந்தோமென்றசொற்கேட்டு வண்மையுள்ளராசனுந்தான் *
சந்தோஷமாகிதயவாகயேதுசெய்தார் *
கஷ்டமுடன்கொண்டுவந்த கனமானகள்ளருக்குத் *
திட்டமுடன்சேவகமுந் திரமாகத்தானெழுதி *
தகுமானதிரவியமுஞ் சந்தோஷமாய்க்கொடுத்து *
வெகுமானஞ்சீமைகளும் வேண்டியதெல்லாமளித்து *
சங்கையுள்ளராசாவுந் தயவாகத்தானிருந்து *
வங்கையுள்ளகள்ளர்தமை வகையாய்ப்பார்த்தேதுசொல்வார் *

பப்பரத்தியரசர் கள்ளரைப் புரவி கேழ்க்குதல்.

ஆனைதனக்கேற்ற வழகானவான்பரியுந் *
தானுமுள்ளசீர்மைகளிற் றண்டும்பரியெங்குண்டோ *
இந்தநல்லயானைக் கிசைந்தபரிபார்த்ததுண்டோ *
சிந்தைமகிழச் செப்புவீரென் றுரைக்க *
வந்தமைந்தகள்ளருந்தான் மனமகிழ்ந்தங்கேதுசொல்வார் *
சந்தேகமையாவே தாண்டும்பரியெங்குமில்லை *
மக்கநகருதித்து வாழுமுகம்மதநூர் *
திக்கிதிலுள்ளக்காபர்களை தினிசுலாமாக்கிவைத்தோர் *
காடுதழைக்கவைத்தோர் கனிந்தபழஞ்சொரியவைத்தோர் *
நாடுதழைக்கவைத்தோர் நல்லமதியவைத்தோர் *
இந்தப்படியே யிருக்குமுகம்மதநூர் *
அந்தமுள்ளமருக ரானவலியாரும் *
ஏறும்புரவியைப்போ லிப்புவியிற்கண்டதில்லை *
பாருலகநாயகன் படைத்தானதிசயமாய் *
வாளுமவர்கரத்தில் வைத்திருக்கும்வாள்போலும் *
தானும்புரவியையு நாட்டமுடன்கண்டதில்லை *

என்றுமிகக்கள்ள ரின்பமுடன்றானுரைக்க
அன்றுயிளவரச ரன்புடனேதான்மகிழ்ந்து
இந்தப்புதுமைதனையிப்போதுநீங்கள்சொல்லீர்
அந்தப்புரவிதனை யன்புடனேகொண்டுவந்தால்
வேணமட்டும்திரவியமும் வெகுமதியாய்நான்தருவேன்
பூணாரமுள்ளதெல்லாம் பூட்டுவேனுங்களுக்கு
என்றரசர்சொல்ல வின்பமுடன்கள்ளரெல்லாம்
நன்றெனவேசொல்லி நாங்கள்கொண்டுவாரோமென்றார்
அப்போதுராஜ ரன்புடனேயேதுரைப்பார்
இப்போதுமதினநகரேகுவீர்நீங்களென்று
நயமாகராஜர்சொல்ல நாட்டமுடன்கள்ளர்சொல்வார்
வயணமுடன்போக வழிச்செலவுக்கெங்களுக்கு
தந்தனுப்புமென்னத் தயவுடனேமன்னவரும்
சிந்தைமகிழ்ந்து சிலதுரொக்கந்தான்கொடுத்தார்

கள்ளர்விடைபெற்றுமதினத்தில்
குதிரைகொண்டுவரப்போகுதல்.

வாங்கியந்தக்கள்ளருந்தான் மகிழ்ந்துநடந்தனரே
தாங்காமலேநடந்தார் தாண்டும்பரிகொண்டுவர
ஆறுமாதப்பயண மன்புடனேதானடந்து
காருலவுகின்றக் கானகமுந்தான்கடந்து
நடந்துமதினநகரில் நாட்டமுடன்வந்தார்கள்
அடர்ந்துவந்தவூர்தனிலே யத்துல்லாதன்மகனார்
வலியமுகம்மதர்க்கு வாய்த்தமருமகனார்
அலியார்தலைமுழுகி யவிருக்கும்நேரமதில்
சிந்தையுடன்போனகள்ளர் செப்பமுடனந்நேரம்
வந்துகண்டார்கள்ளர் மனமுமிகக்கலங்கி
கண்டாரலியெனவே கருத்தில்நினைந்தவர்கள்
நின்றவிடம்விட்டுமப்பால் நேரேநடந்தனர்கள்
வல்லோனுதவியினால் வான்புரவிதன்னையுந்தான்
நல்லகம்பர்கைப்பிடித்து நாடியந்தவீதிவந்தார்
வீதியதுதனிலே விண்புரவியாதமது
ஆதியருளாலே யம்புவியிற்றங்காதாம்
சிலம்புபுலம்பிடுமாஞ் செஞ்சிலம்புகொஞ்சிடுமாம்
நிலங்களதிர்ந்திடுமாம் நீள்புரவிகாற்றங்காதாம்
மன்னரலியேறும் வான்புரவிதானுமது
அன்னநடைசெய்திடுமா மன்னகரின்வீதியெல்லாம்

இந்தநல்லகள்ளர்களு மிதுபுதுமையாமென்று
விந்தையுள்ளக்குதிரை வேடிக்கையைப்பார்த்து
ஒக்கத்திரிவார்க ளூற்றதொருவீதியெல்லாந்
தக்கப்புரவியையுந் தான்கம்பர்கொண்டுசென்று
தண்ணீரைக்காட்டித் தான்திரும்பிப்போகையிலே
கன்னமிடவந்ததொரு கள்ளர்களுமப்போது
இந்தப்புதுமையெல்லா மின்பமுடன்றான்பார்த்துச்
சிந்தைமகிழ்ந்தவர்கள் சென்றொருதலத்தில்
பொழுதுபோகமட்டும் போயிருந்தாரொருமுகமாய்த்
தொழுதபக்கிரிவேடங்கொண்டு அப்புரவாயங்கிருந்தார்
வந்தநல்லகம்பர் வான்புரவிகட்டிச்சென்றார்
அந்தநேரமசொகுத்தி லவியாருங்காபாவில்
சென்றவுடன்வணங்கச் சேர்ந்தாரவியாரும்
அன்றயிறையவனை யன்புடனேதான்வணங்கக்
கம்பருமப்போது கர்த்தன்றனைவணங்கச்
சம்பிரமுடன்போனார் தனியோனுதவியினால்
அந்தநல்லசமயமதி லன்புடனேகள்ளர்கள்தான்
வந்தாரவியும் வணங்குந்தலமதிலே
பக்கிருவேடமது பாங்காகவேயெடுத்துத்
திக்கிருவோதியபின் றின்றுமொசிவணங்கள்
தாருமென்றுகேட்டிடவே தம்பிரான்றன்னருளால்
வாரும்பக்கிரென் றுரைக்க வந்தாரவளவதனில்
நாயனருள்பெற்ற நல்லநபிமகளாரும்
ஆயனல்லரொட்டியுந்தான் தின்னுமென்றேகொடுத்தார்
வாங்கியந்தரொட்டிதன்னை வைத்தவருமேதுசொல்வார்
தாங்கவில்லையெங்கள்பசி தண்ணீருந்தாருமென்றார்
தண்ணீருந்தானும் தயவாயொருகூசாவில்
உண்ணுமென்றுசொல்லி யொருசிரங்கைநீர்கொடுத்தார்
அப்போதுகள்ள ரதிசயமாய்த்தான்பார்த்து
இப்போதெங்களுக்கு யிதுவோவொசிவணங்கள்
அந்நேரம்பீபியர்தா னகமகிழ்ந்தங்கேதுசொல்வார்
இந்நேரம்பிசிமிச்சொல்லி யிதுவேபசியாறுமென்று
ஒசிவணங்கடின்னுமென்ன வுடையோனருளாலே
பசியாறினார்கள் பதினறுபெயருமப்போ
தின்றொசிவணங்கள் தின்னவளர்ந்ததப்போ
உண்டாரவரவர்க ளுடையோன்கிருபையினால்

தண்ணீர்குடித்துத் தவனமிளைப்பாறி
அன்னவர்களெல்லோரு மன்பாய்ப்படுத்திருந்தார்
நஞ்சுதின் றுநஞ்சறுக்கும் நடுச்சாமவேளைதனில்
விஞ்சையுள்ளசொக்குப்பொடி விதமாகத்தானெடுத்து
வான்பரியைத்தானவிழ்க்க வந்தார்கள்கள்ளர்களுந்
தான்புரவிகட்டிநிற்குந் தன்னிடத்தில்வந்துநின்று
சொக்குப்பொடியதனைத் தூவினாப்போது
மிக்கப்புரவியது மிகநிலத்தைநோக்கிமாய்
அப்போகுதிரைகட்டி மானதொருசங்கிலியைத்
தப்பாமற்றானவிழ்த்தார் தானுமந்தக்கள்ளரெல்லாம்
அந்தமுள்ளசங்கிலியை யத்தனையுந்தானவிழ்த்துச்
சிந்தையுடன்வான்பரியைச் செங்கரத்திலேபிடித்து
அலியார்பிடித்துவெட்டு மானதொருநல்பக்கர்
நலமானவாளுதன்னை நாட்டமுடனேயெடுத்து

கள்ளர்கள் எமன் பதியிற் குதிரையைக்
கொண்டுபோய்இராசனைக்காணுதல்.

அவிழ்த்தபுரவியையு மந்தமுள்ளவாளுங்கொண்டு
செவித்துவெளிதனிலே சென்றார்களம்மானை
சென்றுபுரவியதைச் சேரயிமன்ராச்சியத்தில்
அன்றிறையோனருளா லட்சணமேதானெருங்கி
நாயனுதவியினால் நல்லதொருவான்புரவி
மாயமாய்க்கொண்டு மகரிபிலேசென்றார்கள்
சென்றந்தராசர்முன்னே சேர்ந்திருக்குந்தன்கொலுவில்
கொண்டுபோய்விட்டார்கள் கூடிவந்தகள்ளரெல்லாம்
கொலுவிலிருந்தரசர் குதிரைதன்னைத்தான்பார்த்து
வலிவுடையவான்புரவி வந்தவகைசொல்லுமென்றார்
வந்தவிபரமெல்லாம் வகையுடனேகள்ளர்சொல்ல
சந்தோஷமானார்காண் தான்கோ ராசன்மகன்
வெகுமானந்தான்கொடுத்தார் வேண்டுமென்றசீமையெல்லாம்
தகுமானதிரவியமுந் தான்கொடுத்தாரந்நேரம்
சேர்த்தொருபுரவியைத்தான் சீக்கிரமாய்க்கட்டுமென்றார்
ஆர்த்தசொல்லைத்தான்கேட் டன்புடனேகள்ளர்கள்தான்
சொன்னமொழிதப்பாமல் துரைராஜன்தானிருக்கும்
வன்னவரண்மனையின் வாசல்முன்னேகட்டினர்காண்

கட்டும்புரவிமுன்னே காணமும்புல்லுவைக்கத் *
திட்டமுடன்புல்லுகளைத் தீண்டாதொருநாளும் *
தண்ணீருங்கொண்டுபோய்த் தான்முன்னேவைத்தாலும் *
முன்னே[illegible]நபியினால் முகமும்வைத்துபாராதாம் *
பணியாரம்ரொட்டியுமாய் பாங்குடனேவைத்தாலும் *
தனியோனாநபியினாற் றான்றிரும்பிப்பாராதாம் *
இந்தப்படியா யிருக்குமந்தவேளையிலே *

அந்தமுள்ளமதினாநக ரதிசயத்தைச்சொல்லுகிறேன் *
புதுமையலியாரும் பெரியோன்றனைத்தொழுக *
கதிபெறுகுங்காபாவில் கருத்துடனேபோய்ச்சேர்ந்து *
மூசாநபிதொழுத முன்னவன்றனேசாவில் *
ஆசாரமாய்த்தொழுது மாலநபிதாள்பணிந்து *
வந்தாரவருடைய மாளிகைக்குள்ளேயலியார் *
முந்தவவர்வளவின் முகத்திற்கெதிராக *
வல்லமையாக வன்னமணிமண்டபத்தில் *

நல்லதொருவான்புரவி நாட்டமுடன்கட்டிநிற்கும் *
அனுமனித்துநிற்குமது மன்புடனேயெந்நாளும் *
இனியசத்தங்கேளாம லேங்கியலியாரும் *
புரவிகட்டுமிடத்திற் போயங்கேபார்த்தவுடன் *
அரியபுரவியையு மன்பானவாள்தனையும் *
காணாமலேயலியார் கனக்கமனஞ்சலிப்பைப் *
பூணியிறையவனைப் போற்றிப்புகழ்ந்தனரே *
அலியார்மிகவுஞ்சலித் தாறுநாள்மட்டாக *
மெலிவாயவருடைய மாளிகைக்குள்ளேயிருந்து *
ஏழாநாளாகும்போ திறையோனையிடத்தில் *
தாழவேயலியார் தானுமேவந்தனரே *
வந்தவலியாரும் வள்ளல்நபிதிருமுன் *
சிந்தைகலங்கியங்கே செப்புவார்சேதிதனை *

ஆலம்படைக்குமுன்னே யாதியொளிவிற்புகுந்து *
ஞாலமதில்விளக்காய் நானிலத்தில்வந்துதித்த *
எங்கள்நயினாரே யெல்லவர்க்குந்தாயகமே *
மங்காதசந்திரன்போல் மாநிலத்தில்வந்தவரே *
ஆதியருள்பெற்றிருக்கு மப்துல்லாபுத்திரரே *
நீதியுள்ளநாயகமே நிஜவார்த்தைக்கேட்டருள்வீர் *
ஆயபெரியோயனருள் நபியேகேளுமினித் *
தூயபுரவியையுந் துல்பற்குவாள்தனையும் *

கட்டிநிற்குமிடத்தில் காணுமற்போய்விட்டது
திட்டமுடனுரைத்தேன் திருநபியேநீர்கேளும்
ஆதியிறையோன்றனக்குயான்செய்தபாவமிதோ
நீதிமறைகள் நிறைதப்பிப்போனதுண்டோ
என்றலியாருரைக்க விறையோனபிசொல்வார்
நன்றியிறையோன்தூது நமக்குவருஞ்சொல்வேனென்றார்
உரைத்தமொழியதனை யுடையோனுந்தானறிந்து
விரைந்துசிபுரீயிலே மேலோனுங்கூவிசொல்வான்
அந்தமுள்ளவென்றோழ ரகமதுயிறசூல்நபிக்கி
எந்தன்சலாமுரைத்து யிப்போதுசொல்லுமென
ஆனபுரவியையுமன் பானவாள்தனையுந்
தானும்யெமன்ராச்சியத்திற் சதிராயிருக்குதென்று
அலியார்தனக்கிசைந்த வாரணங்கிருக்குதென்று
வலியநபிக்கிசொல்லி வாருமென்றனிறையவனும்
ஏகனுஞ்சொன்னவுட னெழுந்திருந்தார்சிபுறாயீலும்
தாகமதாகப்புவியிற் றனிறங்கிவந்தனமே
ஆதியருட்படிநபிக்கி யன்பாய்ச்சலாமுரைத்துச்
சோதியருட்பெற்றநல்லத் தூயோனிறசூலே
தப்புறவுவான்புரவி துஸ்டக்குவாளதுவுந்
தப்பியதுபோச்சுதென்று தான்சலிக்கவேண்டாங்காலின
வலியுயெமன்ராச்சியத்தில் வாளரசனரண்மனைக்குள்
அலியார்மணமுடிக்க வானதொருபெண்மயிலாள்
இருப்பதாலங்கே யிருக்குதுதான்வாள்புரவி
பொருப்பதுவுஞ்சொல்லிப் போயினார்வானவரும்
நன்றியுள்ளவார்த்தை நல்மாராயங்கேட்டு
அன்றுநபியிறசூ லல்லாதனைப்புகழ்ந்து
வானவருமப்போ வரைந்தவுரைப்படியாய்த்
தானேயலியார்க்குத் தானுரைத்தாரம்மானை
அப்போதலியாரு மன்புடனேயேதுசொல்வார்
தப்பாதிறையோனருட் டந்துதரானவமோ
உம்முடையதன்புதல்வியுண்மையுடனேயிருக்க
இம்மைதனிலேயொருபெண் ணிப்போதுகொள்வேனோ
என்றுசொன்னவுடனே யிறசூல்நபியேதுரைப்பார்
நன்றியுள்ளவலியே நான்சொல்லுவதைக்கேளும்
ஐயபுகழுடையோன்சொன்னபடிதப்பாது
ஐயமில்லையென்று மகிதமக்குத்தாமுரைத்து

போற்றுமிமன்ராச்சியத்திற் புரவியும்வாளதுவும்
பார்த்துவரச்சொல்லி பயகாம்பரலிக்குரைத்தார்
என்னைப்படைத்துயிரணமிகயீபவனே
தன்மைக்குபிறைவெட்டித் தீன்வளரச்செய்தவனென்
றப்போதலியா ராலநபிதாள்பணிந்து
செப்புமுடனேபுரவி தேடுதற்கெழுந்திருந்தார்
கையிற்கெதையெடுத்துக் கடுகவெழுந்திருக்கையிலே
துய்விபுறாகிம்நபி தொழுதலுகர்தானுச்சு
அந்தநேரந்தொழுது மாதியிடந்தனிலேதுவா
சிந்தைமிகமகிழ்ந்து தீர்க்கமாய்க்கேட்கலுற்றார்
வாசியுடன்வாளும்வரவிட்டவல்லவனே
தூசியிலேபறக்குந் துல்துலையும்பார்த்துவர
உன்னுதவிவேண்டுமென் றுகர்ந்தலியார்போற்றிசெய்து
மன்னர்நபியிடத்தில் வந்துவிடைகேட்டார்
கேட்டவுடனேநபியும் கிருபையுடன்பார்த்துரைப்பார்
வாட்டமிலாமலிப்போ வாளும்புரவியையும்
சிந்தைதளராமற் சென்றுபார்த்துவாருமென்றார்
அந்தவுரைகேட் டலியாருமிகவணங்க
அன்பாய்நபியிறசூ லன்றுவிடைகொடுத்தார்
இன்பப்புரவிதேட வெழுந்தாரலியாரும்

அலியார்குதிரையைத்தேடி எமன்பதிவருதல்

நடந்தாராமந்நேரம் நாயனுதவியினால்
அடர்ந்துயெமன்ராச்சியத்திலசரொகுத்திற்போயினரே
போனவுடனலியார் பெரியோன்றனைவணங்கத்
தானும்மலையருகே தானின்றுவாங்குசொன்றார்
வாங்குசொன்னபோதே வான்மலையுந்தானசையும்
பாங்காய்மலையிருந்த பப்பரத்தியார்தளமும்
வானிடியைக்கண்ட மஞ்ஞையதுபோல்நடுங்கித்
தானேவிழுந்து தயங்கிமயங்கினரே
ஆனைகுதிரை யநேகமெல்லாஞ்செத்திடவே
தானேபயந்தரசன் தான்மயங்கிவீழ்ந்தனரே
செவியடைத்துக்கண்கள்ரெண்டுஞ் சிதறத்தடுமாறி
புவியில்விழுந்தரசன் பிணம்போ லேதான்கிடந்தான்
மயக்கந்தெளிந்தரசன் மந்திரிமார்க்கேதுரைப்பான்
தயங்கும்படிசத்தமிட்ட தாருலகெலாமதிர
வானிடியோதேவோமற்றுமுள்ளஜீன்தானோ
தானிலத்திற்சத்தமிது நாமறியோமெப்போதும்

அரசனிவைகேட்க வதிலொருவன்றானுரைப்பான்
தெரியாதுயாரோ திருநகரில்வந்தவர்கள்
மக்கமதினமிருந்து வந்தவனுக்காணுமிவன்
மிக்கயிறையவனை மிகவேவணங்குதற்கு
சத்தமிடவேண்டுமாம் தன்மார்க்கமப்படியாம்
நித்தமஞ்சுவேளை நின்றுமங்கேகூப்பிடுவார்
மேற்குமுகமாக விழுந்துமங்குதான்கிடந்து
தாக்குடையராயன் றனைவணங்குவானெனவே
அந்தமொழிகேட்டரச னவனுமங்கேயேதுசொல்வான்
இந்தநம்மூர்தனிலே யிவன்வரவுங்காரியமோ
குன்றுமலையுருட்டிக் கொல்லுமெனவேயுரைத்தான்
துன்றுமலையைப்போ துணிந்துமவர்மேலுருட்ட
யிரண்டுவருங்கற்களெல்லாம் பெரியோனுதவியினால்
திரண்டவியார்மேலே சோவிழுகாதாம்
பார்த்தரசனுந்தான் பதறித்திகைத்துநின்றான்
காற்றும்பிசலதுபோலக் கடுகிமலைவிட்டிறங்கி
வந்தானரசனவன் வல்லலியார்முன்பாக
அந்தமுடனவனு மார்ப்பரித்துநிற்கயிலே
அலியார்தொழுதிருக்கு மந்தயிடந்தனிலே
வலியவரசனுந்தான் வல்லமையாய்வார்த்தைசொல்வான்
அந்நேரஞ்சுசீதி லலியாருந்தான்விழுவார்
மன்னவன்றன்சேனையெல்லாம் வந்துவளைத்துநிற்க
வணக்கமுகிந்தலியார் வல்லவனைத்தான்புகழ்ந்தார்
இணக்கமுடனிருந்தார் யிறையோனருளாலே
கண்டரசனுந்தான் கைநீட்டிப்போராட
சென்றுவருகையிலே சிறுமலியேதுசொல்வார்
என்னைத்தொடவேண்டாம் இளமையிலேஇப்போது
மன்னனுக்கேராது மடமையிலேயிச்செயல்தான்
என்றலியார்சொன்னவுட னிளவரசன்றான்கேட்டு
அன்றரசன்மக னார்ப்பரித்துக்கண்சிவந்து
என்னடாசொன்னா யிராசரெல்லாம்பார்த்துநிற்கப்
பெண்ணென்றுசொன்னப் பொய்யனேவுன்னாக்கறுப்பேன்
என்றரசன்மகனா ரிருகண்ணுந்தான்சிவந்து
சென்றுவருகையிலே சிறும்புலியலிபார்த்து
கையிலிருந்தவொரு கெதையாலாடைதள்ளிவிட்டார்
மெய்யிலுடையாடை மேலொதுங்கிப்போனதுவே

பப்பாத்தியரசன் அலியாரால் பெண்ணாகி யரண்மனையிலிருக்குதல்.

ஆண்சொரூபமாறி யருவைமயிலாளாகி *
பெண்சொரூபமாகப் பெற்றரசனின்றதின்பின் *
நிலைகுலைந்துமெய்மறந்து நீலவிழிகளைநோக்கி *
தலைதிரும்பிப்பாராமல் தன்மனைக்குள்ளேகினரே *
அப்போதலியாரு மல்லாதனைநினைந்து *
செப்பமுடன்மதினா சேர்ந்தார்மகரிபுலே *

அலியார் மதினாவைச்சேர்ந்து நபியைக்காணுதல்.

சேர்ந்துநபியுடைய சீர்பாதந்தெண்டனிட்டு *
சார்ந்தயெமன்ராச்சியத்திற் றானடந்தசேதிதனைப் *
படிப்படியேசொல்லப் பயகாம்பர்தான்மகிழ்ந்து *
வடிப்பமுகம்மதரும் வல்லவனைத்தான்புகழ்ந்து *
நாயன்றனைவணங்க நல்லதொருமோதிரனைத் *
தூயதொருமகரிபுக்குச் சொல்லுமென்றார்வாங்குதன்னை *
அப்போதுமோதி னகமகிழ்ந்தொதுவெடுத்துச் *
செப்பமுடன்வாங்குதனைத் திடமாகச்சொன்னாரே *
வாங்குசொன்னபோதே வல்லநபியசபாக்கள் *
தாங்காமலேயொதுவுந் தாஞ்செய்தாரியார்களுடன் *
தக்கமகரிபுவுந்தான் றொழுதாரியாவர்களும் *
மிக்கதொருயேசாவு மேலோன்றனைவணங்கி *
நாலியார்களசாபிகளும் நன்னபியின்றன்பணிந்து *
கோலமனைதனக்குக் கொள்கையாத்தானடந்தார் *
அவரவர்கடன்மனையி லன்புடனேபோயிருக்க *
தவமாம்யெமன்ராச்சியத்திற் றானடக்குஞ்சேதிசொல்வாம் *
ஏகனுதவியினா விராசனும்பெண் ணாயிருக்க *
வாகாயெமராச்சியத்தில் வந்திருக்கும்வான்புரவி *
தண்ணீர்மொசிவனங்கள் தானுமதுதீண்டாதாம் *
மன்னனுதவியினால் வாடாமலேயிருக்கும் *
ச[illegible]கையுள்ளபுரவிக்குத் தண்ணீர்காட்டுதற்கு *
அங்குள்ளோரைப்பார்த் தருவையருந்தானுரைத்தார் *
அத்தலத்திலுள்ள வனைவர்களும்வான்பரியைப் *
பத்தியுடனடத்திப் பரிவாய்த்தண்ணீர்க்காட்டி *
வாரோமென்றுசொல்லி மாண்டாரனைவோர்கள் *

தாரணியின்மன்னவர்கள் தாளுகவர்தவனைக்
கடித்துவுதறிவிடுங் கத்றோனருளாலே
பிடிக்கவென்றுவந்தவனைப் பின்காலாலேயுதைக்கும்
வந்துபிடித்தரசர் மாள்வார்களப்போது
இந்தவிதமோராண் டிருந்ததுவான்புரவி
ஒருவருக்கீமட்டு முகத்திருக்குநாளையிலே

தென்றேசம்சூரராசன் மதினாநகர் மேற்படையெடுத்துவருதல்.

திருமதினாவில்நடந்த சேதிதனைச்சொல்லுகிறேன்
தெற்கேயொருராச்சியத்தில் திரள்படையோடேயெழுந்து
தக்கப்புகழுடைய தானுமொருவாளரசன்
சூரனென்னுமரசன் தோன்றியேபடைகளுடன்
சேரவுமேவந்து திரண்டுபடை.சேர்த்துக்
கனத்தபடையுடனே கடல்போலேசூழ்ந்துவந்து
சினந்துமதினாநகரஞ் சேரவேதான்வளைந்தார்
படைகள்வந்துவளைந்தவிதம் பயகாம்பர்தான்பார்த்து
உடையோனைத்தானினைந்து வுள்ளமிகச்சலித்தார்

(நபிக்கிச்சிபுரியில்நாதுசொல்லல்)

அப்போதுநாய னன்பாய்ச்சிபுரியிலே
செப்பமுடனழைத்துச் செப்புவானப்போது
காவலுடன்சேனை கனத்தபெரும்படையாய்த்
தாவிமதினநகர் தான்வந்துசூழ்ந்தார்கள்
இந்தப்படைதனக்கு யென்றோழர்முகம்மதனார்
எந்தவிதம்பொருவோமென்று யெண்ணிமனஞ்சலித்தார்
நல்லதுநீர்வானவரோ நபியிடத்தினீர்போய்ச்
சொல்லிவருவீரெனச் சொல்லவிறையவனும்
அந்தநல்லசொற்கேட் டன்பாய்ச்சிபுறாயிலும்
வந்தார்மதினநகர் வள்ளல்முகம்மதர்க்கு
இறையோன்சலாஞ்சொல்லி யெடுத்துரைப்பார்நன்னபிக்கி
களைசேர்க்குநன்னபியே கத்தனுமக்குச்சொன்னான்
வானங்குவிந்ததுபோல் வந்தபெரும்படையைத்
தானேநீர்கண்டு தான்சலிக்கவேண்டாமென்று
எதிர்ப்பாளையம்வகுத்து யெதிராளிதன்படையைக்
கதிப்பாய்ப்பொருதிடவே கத்தனுரைத்தான்காண்
வல்லோன்சிபுறாயிலும் முகம்மதரிடஞ்சொல்லி

நல்லசொர்க்கலோகம் நாடியேசென்றதன்பின்
அப்போதுநபியிறசூலன்பாகமோதினிடஞ்
செப்பினார்மதினநகர் சேர்ந்ததொருவீதியெல்லாம்
ஒக்கப்பறைபோட் டொருநொடியில்வாருமென்றார்
ஊக்கனபியிறசூலன்பானசொற்படியே
பட்டணங்கடோறும் பறைபோட்டொருநொடிக்குள்
திட்டமுடன்நபிமுன் சென்றார்காணம்மானை
அறைந்தவிசேஷங்கேட்டு யார்களசுகாபிகளும்
நிலறதிறையாச்சூழ்ந்து நின்னயமாயெல்லோரும்
வந்தார்நபிசமூகம் வானங்குவிந்ததுபோல்
அந்தநல்லவேளையிலே யாலநபிதாள்பணிந்து
எதுவிடையெங்களுக்கு யேகல்திருநபியே
நீதியுடனருளுமென்றான் நிச்சயமாய்நபியுரைப்பார்
அலியார்வரவுமில்லை யவர்புரவிவாளுமில்லை
சலியாமலேபடையைத் தானேபொருதவென்று
கம்பர்தனைக்கேட்கக் கம்பரப்போதேதுசொல்வார்
சம்ப்ரமுள்ளநன்னபியே சட்டமதாயானுரைப்பேன்
அலியார்சலிப்பாகி யவர்புரவியில்லாமல்
நலிவாகயில்லிடத்தில் நாட்டமதாயிருப்பரென்று
அப்போதுகம்பருட னலநபிதாமுரைப்பார்
இப்போதலிபுலிக்கு யிணக்கமுடனேசொல்லி
அழைத்துவாருமென்று ராலநபியிறசூல்
விழைவுடனேகம்பர் வெற்றியலிதாள்பணிந்து
வாட்டமாயிருப்பதென்ன வல்லோனலிபுலியே
கூட்டிவரச்சொன்னார் குதாயிறசூல்நபியுமெனச்
சொன்னபொழுதே துங்கப்புலியலியார்
மன்னிறையோனைப்போற்றி மனமகிழ்ந்துதானடந்தார்
அலியாரெழுந்துசென் றாலநபிதாள்பணிந்து
மெலியாமலேஇறையோன் வெற்றிபெற்றநாயகமே
எதுவிடையெனக்கு மென்றுமலியார்கேட்க
ஆதியந்தமில்லானருள்பெருகும்நபியுரைப்பார்
அரசில்புலியலியேயரசர்களும்படைகூட்டிப்
பிரிசமுடன்வந்தார்கள் பெரியோன்புலியேயென்று

(நபிக்கிச்சிபுரியில்வந்தது தாதுசொல்லல்)

அலியார்க்குநபியுரைக்க வன்புடையநாயனுற்றான்
லலியச்சிபுரியிலே வாகுடனேகூவிசொல்வான்

என்னுடையதோழர் யிறசூல்முகம்மதர்க்குச்
சொன்னேனென்சலாமென் றுரும்படைக்கியஞ்சாமல்
சிந்தைமிகமகிழ்ந்து சீக்கிரத்திற்சென் றுநின்று
விந்தையுடன்காபர்படை வெல்லாதெனநோக்கி
ஆலநபிகரத்தா லள்ளியொருபிடிமண்
சீலமுடனெறியச் செப்பும்பகைவர்கள்மேல்
பட்டுமடிவார்கள் பாழுங்குபிரர்படை
நட்டியாய்மடிந்தவர்போல் நாநிலத்தில்நின்றவர்கள்
ஆலநபிதீனி லவர்வருவாரென்றுசொல்லிச்
சீலமுடனபிக்குத் திரள்படைகள்வேண்டுமென்றால்
வானவர்கள்கோடிவல்லமையாய்வருவாரென்றுந்
தானேபடைபொருதச்சொல்லித் தான்திரும்பிவாருமென்றன்
வாருமென்றுசொல்லி வல்லோனுரைத்திடவே
ஊருந்தவமுமில்லா னுரைத்தவகைப்படியே
நன்றெனச்சிபுரியிலும் நாட்டமுடன்வந்திரங்கி
அன்றுதிருநபிமு னன்பாய்ச்சலாமுரைத்துக்
கத்தன்சலாமுரைத்துக் கவலனுற்றார்வகைப்படியே
உற்றசிபுரியிலுமுரைத்துமகன்றவுடன்
ஆண்டபெரியோ னருளுதவியானதெல்லாந்
தாண்டெப்பரியார்களுடன் றானுரைத்தாரம்மானை
உரைத்தநபியிறசூ லுண்மையுடனேயெழுந்து
விரைந்துசமர்வெளியில் வேதநபிதானடந்தார்

மதினநகர் நபியிறசூல் காபர்மேற்
படையெடுத்துப் போருதல்.

அந்தநல்லவேளையிலே யார்களுடமசாயிகளும்
சிந்தைகலங்காமல்சீக்கிரமாய்ப்படையெழுந்தார்
அப்போதுகாபர்படை யலைகடற்போலெழுந்து
தப்பாமலெதிர்த்துத் தான்வெளியேவந்ததுமே
வடகடலுந்தென்கடலு மற்றுமுள்ளகீழ்கடலுந்
திடமுடனேமேற்கடலுந் திரண்டெதிர்த்தாப்போல்
ஆலநபிபடையை யப்போதுதான்வளைந்தார்
சீலமுடனேதான் சேர்ந்ததொருதன்படையும்
வந்தபடைதனக்கு வகைசெய்யமாட்டாமல்
சிந்தைகலங்கித் திரளாகநின்றிடவே
வல்லோனபியிறசூல் வானவர்தான்சொன்னபடி
நல்லதொருமண்ணையள்ளி நாடிப்படைதனிலே

எறிந்தார்நபிசரத்தாலெங்கும்போய்த்தான்விழவே
வருந்தியொருபிடிமண்மலைபோலேதானாகி

காபர்படைமடிந்துத்தப்பியபேர்
தீனாகித்தங்கள்பதிசேர்தல்.

வானவர்கோன்சொன்னபடி மடிந்ததுகாபர்படை
தானேமடிந்ததுபோய்த் தான்பிஞ்சிநின்றவர்கள்
அஞ்சிப்பயந்தவர்க ளால்நபிதாள்பணிந்து
கொஞ்சிநபிகலிமாக் கூறினாரெல்லோரும்
கலிமாவுஞ்சொன்னதின்பின் கத்தனுதவியினால்
சலியாமற்றன்னகர்க்குத் தானேகிப்போனபின்பு
மன்னன்நபியிறசூல் மற்றுநாலியார்களுடன்
நன்மையசபாக்களுடன் நன்மதினமாநகரில்
சிந்தைமகிழ்ந்திருந்தார் சேனைகளெல்லோரும்
முந்தவுதித்த முகம்மதிறசூல்நபியும்
சல்லாபமனமகிழ்ந்துச் சாற்றுவார்யார்களுடன்
எல்லோருந்தன்மனைக்கி யேகுங்கோள்நீங்களென்று
சொன்னவுடன்யார்களுஞ் சூழ்ந்தவசாபிகளும்
அந்நேரந்தன்னிலருட்படியேயெல்லோரும்
சங்கையதாகத் தானேயவரவர்கள்
திங்கள்நபிதாள்பணிந்துச் சென்றார்காணம்மானே
போனாரதின்பிறகு புதியோன்நபியிறசூல்
தானுமணிமாளிகைக்குட் டாமகிழ்ந்துபோயினரே

(சிபுரியில் தூதுவந்து நபிக்குச்சொல்லுதல்.)

அப்போதுநாய னன்பாச்சிபுரியிலே
செப்புமுடனழைத்துச் செப்புவானோர்வசனம்
ஆலநபிதமக்கு மன்புடனேயெந்தன்சலாஞ்
சிலமுடனுரைத்துச் செப்புவீரிச்சேதிதனை
அலியார்குதிரையதுமன்னெயமன்ராச்சியத்தில்
நலியாமற்போனதைத்தான் நாட்டமுடன்தேடுதற்கு
அலியாருந்தான்போக வாண்டவனுரைத்தேதனென்று
வலியமுகம்மதுக்கு வகையுடனேசொல்லுமென்றான்
என்றுரைக்கநாய னிமையோருமன்னனிரங்கி
அன்றுநபியருகே யன்பாய்ச்சலாமுரைத்து
நாயன்சலாமுரைத்து நாட்டமுடனேதுரைப்பார்
தூயோனுரைத்தபடிச்சொல்லியங்கேதான்மறைந்தார்

அப்போதுநபியிறசூ லலியார்தனையழைத்துச் *
செப்பமுள்ளவானோர்சொன்ன சேதிவுரைப்படியே *
குதிரைதனைத்தேடிக்கொண்டுவரப்போவீரென்றார் *
எதுவேஷங்கொண்டிப்போதுபோவேனென்றார் *

(சிபுரியில் வளையல்கொண்டுவந்து-கொடுத்தல்.)

அப்போதிறையவனு மன்பாகச்சிபுரியிலே *
செப்பமுடனிறங்கிச் சிங்கப்புலியலிக்கி *
வளருமெமராச்சியத்தில் வான்புரவிதேடுதற்கு *
வளையற்செட்டிவேஷம் வயணமாய்த்தானெடுக்க *
பாசமுள்ளசொர்க்கமத்திற் பாங்கானவளையல்விற்கும் *
வேஷமெல்லாங்கொண்டுவிதமாகமண்ணிறக்கி *
பயகாம்பர்திருச்சமுகம் பாங்காகவையுமென்றான் *
வயணமாய்வல்லோனுரைக்க வந்தார்சிபுரியிலும் *
வந்தார்நபியிடத்தில் வைத்தகன்றார்வேஷமெல்லாஞ் *
சுந்தரஞ்சேர்வேஷமெல்லாந் தூயோனபிதானெடுத்து *

(அலியார்வளையல் செட்டிவேடம்பூணுதல்,

அப்போதலியாரையு மன்புடனேவேஷமெல்லாந் *
தப்பாமற்போடுமென்றார் தானபியாரந்நேரம் *
நெத்தியிலேநாமமிட்டு நேயவுருமால்கட்டி *
பத்தியுடனேவளையல் பாங்காகத்தோளிலிட்டு *
கம்பிளியுமேற்போட்டுக் கையிற்றடியெடுத்து *
நம்பிநபிதாள்பணிந்து நாடிவிடைதாருமென்றார் *
அப்போநபியிறசூ லகமகிழ்ந்துதானுரைப்பார் *
செப்பமுடனேயலியே சீக்கிரம்போய்வாருமென்றார் *
சங்கையலிவிடை வாங்கித் தனியோனுதவியினால் *
சிங்கப்புலியலியுந் தூயனுவகைதொழுது *

(அலியார்வளையற்செட்டியாக யெமன்பதிக்குப் போகுதல்)

செப்பும்நபிதாள்பணிந்து சிறப்பாய்வெளியில்வந்து *
தப்பாமலேபாதை தானோக்கிநடந்தனரே *
நடந்துயெமன்ராச்சியத்தில் நாட்டமுடனசொருத்தில் *
அடர்ந்தபுகழலியா ரன்பாகப்போய்ச்சேர்ந்தார் *
போனவிடத்திற் புகழ்பெரியராஜனிட *
ஆனதொருசிங்காரத் தோப்பூரணியருகே *
வளையற்கடைவைத்தார் வல்லவலிபுலியார் *
வளையதொருதோப்பைப் பார்க்கவந்தசேவுகர்கள் *

வந்தவர்களேதுசொல்வார் வாகுடையசெட்டியாரே *
இந்தநல்லதோப்பி லெவர்வளையல்கொள்வார்கள் *
பட்டணத்துவீதியிலே பாங்காக்கடைவைத்தால் *
திட்டமுடன்கொள்வரென்று சேவகருந்தாமுரைத்தார் *
அப்போதலியாரு மவர்களுடனேதுசொல்வார் *
தப்பாமலென்வளையல் தாரணியோர்கொள்ளார்கள். *
நாயனருட்பெருகு நல்லதொருயென்வளையல் *
ஆய்ந்தநல்லதோப்பி லருகூரணியருகில் *
கொண்டுகடைவைப்பேன்காண் கோலமுள்ளராசன்மகள் *
தண்டிகையில்லாமற் றான்வந்துகொள்வதல்லால் *
மற்றொருவர்கொள்வதில்லை மன்னன்சேவகரேயென்று *
பத்தியுள்ளசெட்டிசொல்ல பட்டணம்போய்ச்சேவகரும் *
அரசன்மகள்சமுகம் அன்பாகவேயுரைக்கப் *
பிரிசமுடன்ராசன்மகள் பெருமையாய்த்தானெழுந்து *
வீருடனேதாதியர்க்கு விகிதமாயேதுசொல்வார் *
ஆரோதெரியாதுவல்புடனேதோப்புதனில் *
வளையற்கடைகள் வைத்திருக்குஞ்சேதிதனை *
பளையதொருசேவகன்றான் பாங்காகவந்துரைத்தான் *
ஆகையினாலே யன்புடனேநீங்கள்சென்று *
வாகானசெட்டியையும் வரவழைத்துவாருமென்றார் *
அப்போதுசென்றார்களன்புடனேதாதியர்கள் *
தப்பாமலேநடந்தார்தானுமந்தத்தோப்பதனில் *
சென்றொருமனதாய் சேரவேதாதியர்கள் *
கண்டார்வளையல்தனைக் கனகமுற்றதாதியர்கள் *
எதுகாணிவ்வளைய விப்புவியிற்செட்டியாரே *
சோதிவொளிவுடைய துய்யதொருதன்வளையல் *
விலைகள்சொல்லுஞ்செட்டியென்ன விதமுடனேசெட்டிசொல்
மலைகளதுபோலே மாடதங்கந்தான்குவித்தால் [வார்
தருவேனொருவளையலென்று தானுரைத்தார்செட்டியாரும் *
பருவமுள்ளதாதியர்கள் பதில்வார்த்தையேதுசொல்வார் *
சொன்னவிலைதருவோம் துய்யதொருசெட்டியாரே *
மன்னரசியாண்மனைக்குள் வாருமென்றுதானழைத்தார் *
நல்லதெனவளையல்செட்டி நாட்டமுடனேநடந்து *
வல்லரசியரண்மனைக்குள்வந்தார்வளையல்விற்க *
அலியார்செட்டிவரவுகண் டானதொருதன்பாவி *
வலியவனுமாணித்து வாய்விட்டேகூவிடுமாம் *
அப்போதரசன்மக ளானதாதியைப்பார்த்து *

செப்புவார்ப்போது செம்மையுள்ளதன்புரவி
வந்துவொருவருக்கும் வாய்விட்டுக்கூவவில்லை
இந்தவளையல்விற்கு மிப்பெரியசெட்டியாரைக்
கண்டனுமானித்தக் காரணந்தானேதெனவே
என்றுசொல்லிவலியாரு மெடுத்துரைப்பார்நேரம்
அரசன்கண்மணிவிளக்கா யானதொருகன்னியரே
புரவியனுமானித்தப் புதுமைதனைச்சொல்லுகிறேன்
மதுரைநகரமதில் முகம்மதிறசூல்மருகர்
நதியிலலியாருந் தானே அம்புரவியிது
அவர்களரண் மனையிலன்புடனேயான்சென்று
கவனமுடனல்லக் கனகவளைவிற்பதன்றி
அப்போபுரவி யதிர்ந்திருக்குமென்றனையுந்
தப்பாமலேயதற்குத் தக்கனிருக்காட்டிடுவேன்
ஆனதினாலென்னை யதிர்ந்தனுமானிக்குதது
ஞானமுடனிறையோன் றன்னருளாலென்றுரைத்தார்
அப்போதரசியரு மதிசயமாய்த்தான்கேட்டு
இப்போதுசெட்டியாரே யென்னவிலைவளையலென்றார்
என்றுசொன்னபோதே யிறசூல்மருமகனார்
அன்றலியாரு மதற்குவிலைசொல்லிடுவார்
மலைகளதுபோலே மாடதங்கத்தான்குவித்தால்
சிலைநுதலிவ்விழியாரே சேர்ந்தவளைகொடுப்போமென்றார்
நல்லதென்றுசொல்லி நங்கையருந்தானெழுந்து
வல்லபமாய்த்தங்க மலைபோலேதான்குவித்தார்
அந்நேரந்தானே [illegible] யலியென்னுஞ்செட்டியாரும்
வன்னமுடன்வளைய [illegible] தன்னை வகைவகையாய்த்தான்பார்த்து
[illegible] லியார்ப [illegible] ரத்தியாருக்கு வளையல்தொடுத்தல்)
கோ [illegible] கோலமுள்ளகன்னியரைப்
பாவ [illegible] ய்க்கைபிடித்துப் பாங்குடனேநெட்டையிட்டு
கை [illegible] பிடித்திழுத்துக் கருணையுடன்முன்முறிக்கிப்
[illegible] யமெல்லாந்தானறிய வளையத்தெறித்திடுவார்
வளையத்தெறிக்கும்போது வல்லவனுந்தானுரைப்பான்
இளமயிலாள்சொரித்ததங்க மெத்தவலியேயுமக்கு
சொரித்தபரியமென்று சூதாயுரைத்தானப்போது
தெரித்தவளையலெல்லாந் தோகையர்க்கிளமதுவாம்
என்றுரைக்கநாய னின்பமுள்ளசத்தமது
அன்றலியார்செவியி லன்புடனேகேட்டிடவே

மன்னரலியாரு மனமகிழ்ந்துமப்போது
என்னுடையநாயகனே எனக்குதவிசெய்வையென்று
வரிசைப்புலியலியு மன்னன்மகள்தன்னுடனே
பிரியமுடன்சொல்வார் புரவிக்குநீர்காட்டி
வாரோமென்றுசொல்ல மங்கையருமேதுசொல்வார்
பாரிலுள்ளவரசர் பாங்காகவந்துவந்து
பிடிக்குநீர்காட்டவென்று பேசிவந்தமன்னர்களை
கடித்துயெழுபதுபேரைக் கண்காணக்கொன்றதுகாண்
இந்தப்புரவிதன்னை யிப்போதுநீரவிழ்க்க
சிந்தைமகிழ்ந்துரைத்தீர் சேதியல்லசெட்டியாரே
உன்னையதுகடித்து வுதறிவிடும்பாராமல்
என்னைப்படைத்த யிறைவனுந்தான்பொறுக்கான்
என்றுரைத்தராஜகன்னிக் கேழையலியேதுசொல்வார்
கொன்றுபோட்டாலுமென்னைக் குற்றமில்லையுந்தனுக்கு
ஆதியருளாலே யவிழ்த்துமங்கேநீர்காட்டி
நீதியுடன்வருவேன் நில்லுமிங்கேகன்னியேநீர்
கொடுத்ததிரவியம்யான் கூறும்வளையலுந்தரன்
எடுத்துநான்போகவில்லை யிருக்கட்டுமிவ்விடத்தில்
என்றுபுரவிதன்னை யின்பமுடன்றனவிழ்த்து
அன்றிறையோனைப்புகழ்ந் தன்புடனேயேறினரே
அறிஞரலிபுலியு மிறையோனருளாலே
பாரமுடனேயேறிப் பாங்காய்வெளியில்வந்தார்
நடத்திப்புரவிவிட்டு நாட்டமுடன்காபர்களை
அடர்ந்துகலிமாவை யல்லவருஞ்சொல்லுமென்று
சத்தமொன்றுபோட்டார் தார்வேந்தரலிபுலியார்
மெத்தவெகுதூரத்தில் விண்ணிடிந்தவாறதுபோல்
ஆலமிமருக ரார்ப்பரித்துக்கோட்டைதனி
நாலுதிக்குஞ்சென்று நாட்டமுடன்சத்தமிட்டார்
சத்தமிட்டபோதே தானுமந்தக்கோட்டையெல்லா
மெத்தவுமிடிந்திடுமோ மிருத்தபுற்றுவிழுந்திடுமாம்
அந்நேரமேயலிமா ரார்ப்பரித்துக்காபர்களை
இந்நேரமேகலிமா யியம்புமென்றுதாமுரைத்தார்
அப்போதுகலிமாவை யன்புடனேசொன்னார்கள்
தப்பறவாய்க்கலிமாவை சொல்லாதகாபர்களை
வெட்டிக்கருவறுத்தார் வீரப்புலியலியார்
மட்டில்லாச்சேனை மடிந்துபோய்மற்றுமுள்ளோர்
திட்டமுடன்கலிமாச்சொல்லி தீனவர்களானார்கள்

சட்டமுள்ளவரசன்மகள் தன்னுடையமந்திரியும் *
எல்லாருந்தீனாகி யிறசூல்நெறியில்வந்தார் *
வல்லவரசன்மகள் மற்றுமுள்ளோர்தீனானபின்பு *

அலியார் குதிரையைக்கொண்டு

மதினமாநகரஞ்சேர்தல்.

வட்டமிடும்பரியை வல்லரவிதான்திருப்பி *
யட்டதிக்கும்போற்று மருள்மதினம்வந்தனரே *
வந்துமகரிபுவில் வல்லநபிதாள்பணியச் *
சிந்தைமகிழ்ந்து செப்புவார்நன்னபியும் *
நல்லவலிபுலியே நாட்டமுடனீபோகி *
வல்லமையாய்வந்த வகைவிபரஞ்சொல்லுமென்றார் *
அப்போதலிபுலியார் அன்புடனேயுரைப்பார் *
செப்புமெமன்ராச்சியத்தில் சேர்த்தசெனங்களெல்லாம் *
கலிமாவுரைத்தார்கள் கத்தனுவிதயினால் *
சலியாமையெல்லோருந் தான்தீனவரானார்கள் *
வெற்றிபெற்றவாறுதனை வேங்கையலிசொன்னவுடன் *
உற்றதிருநபியு முகந்திருந்தாரம்மானே *
ஆதிநபியிறசூ லன்புடனேமோதீனே *
நீதியுள்ளவாங்குதனை நிச்சயமாச்சொல்லுமென்றார் *
சொல்லுமென்றுசொன்னவுடன் துய்யவொருமோதீனும் *
நல்லதொருவாங்குதனை நாட்டமுடனுரைத்தார் *
அப்போமகரிபுவி லாலநபியார்களுடன் *
செப்பமுள்ளய[illegible]வாக்கள் சேர்ந்துதொழுதனரே *
எ[illegible]வாகுத்து மிகமுடனேதான்தொழுது *
கூசாம[illegible]யலியார் குதாயிறசூல்தாள்பணிந்து *
தங்களிடபாளைக்குத் தானும்புரவியுமாய் *
பொங்கமுடன்சேர்ந்து புரவிகட்டித்தானிருந்தார் *
வானோர்புகழிறசூல் மன்னவருந்தானெழுந்து *
கோனருளாற்சென்றார் குலவுகின்மாளிகைக்குள் *
யார்களசுவாக்க ளவரவர்தம்மனைசேர்ந்தார் *
பாருலகிலெமன்பதியின் பன்மைசொல்வேனம்மானே *

எமன்பதியில் பப்பாத்தியார் நாயனைப்புகழ்தல்.

எமனென்றபட்டணத்தி லிறந்தவர்போய்மற்றுமுள்ளோர் *
நாமுநல்லவரசன்மகள் நானிசிலாமானதன்பின் *

வல்லயிறையவனை வணங்கியிருந்தனரே *
நல்லரசன்மகள் நங்கையருமீதுரைப்பார் *
அப்போதலியெனவே யறிந்துமவர்தீன்வழியில் *
செப்பமுள்ளகலிமாத் தீன்வழியெல்லாமறிந்து *
ஆதிமுதலோனை யன்புடனே தான்வணங்கி *
நீதியுடனென்னை நீணிலத்திற்றான் படைத்துப் *
பெண்ணென்றறியாமற் போற்றியெனைவளர்க்க *
முன்னேயுதவிசெய்தாய் மெய்ப்பொருளானவனே *
ஆணென்றுசொல்லி யரசாளவைத்தவன்நீ *
காணவந்தமன்னரெல்லாங் கப்பங்கட்டவெந்தனுக்கு *
ஒப்பஞ்செலுத்தி யுலகாளவைத்தவன்நீ *
செப்பமுடன்நகரிற் சேர்ந்தகொலுவேளையிலே *
அன்றலியாரைத்தா னனுப்பிவைத்தவல்லவனீ *
என்றன்மனைப்புதல்னை யெவரறியமங்கையென்று *
கனதியலியுரைக்கக் கட்டுமெட்டாய்வைத்தவன்நீ *
அலியார்வளையல்தனை யன்புடனேகொண்டுவந்து *
வலியவேயெந்தனுக்கு வளையலிடச்செய்தவன்நீ *
இன்னமலியாருக்கு மெந்தனையேபாரியாகப் *
பின்னுமுதவிசெய்வாய் பெரியோனேமெய்ப்பொருளே *
காயமதாய்ச்செய்வாய் கர்த்தனேயென்றுமங்கை *
நாயன்றனைவணங்கி நாளுந்துவாச்செய்திருந்தார் *
அப்போதுநாய னன்புடனேவானவரைச் *
செப்பமுடனழைத்துச் சேதிசொல்வார்சிபுரியிற்கு *
தூதர்நபிதமக்குச் சொல்லுநீரெந்தன்சலாம் *
நீதமுள்ளநாயன் நிச்சயங்களேதுசொல்வான் *
வலியமெவமன்ராச்சியத்தில் வாழுமரசன்மகள் *
மெலிவாகவாறுதின மெல்லியருந்தாள்சலித்து *
இருக்கிறளென்று யேகனுரைத்தானென்றும் *
பெருக்கநபிக்குச்சொல்லி பெரியோனைவிடுவியே *
எகிமனைமுடித்து இப்போவரும்படியாய் *
வாகாச்சிபுரியிற்கு வல்லவனுந்தானுரைக்க *

(சிபுரியில் நபிக்கித்தூதுசொல்லல்)

அப்போதுவானவரு மன்புடனேவிண்ணிறங்கித் *
தப்பாநபியிறசூல் தன்முன்னேவந்துநின்று *
நமதுசலாஞ்சொல்லித் தம்பிரான்சலாமுரைத்து *
இமையோருமப்போ தேகனுரைத்தபடி *

வகைவகையாய்ச்சொல்லி மறைந்தனர்தானம்மானே
தொகைவிசேடமெல்லாந் துய்யோனுரைத்தபடி
ஆலநபிபிறகு லலியார்தனையழைத்து
சீலமுடனிறையோன் செப்புமொழிதப்பாமல்
கனமாயெமன்பதியிற் கன்னியிடநீர்போய்
மணமுடித்துவாருமென்று வள்ளலிறசூலுரைத்தார்
வல்லநபியையப்போ வணங்கிமிகப்பணிந்து
நல்லதெனவேநடந்து நாட்டமுடன்மனையில்வந்து
செல்வநபிமகளாரைச் சிறப்புடனேதானழைத்து
நல்லவிபரமதாய் நாயகிக்குத்தாமுரைப்பார்
ஆண்டவனுரைப்படியே யாலநபிசொன்னதுவும்
வேண்டிமணமுடித்துவிரைவில்வரச்சொன்னதுவும்
படிப்படியேசேதிதன்னைப் பாத்திமாவுக்குரைத்து
வடித்தபுகழிறசூல் மகளாரேயெனக்குவிடை
தாருமென்றேயலியார் தன்மையுடனேகேட்கப்
பாரில்மங்கையர்போற்றும் பாத்திமாவேதுசொல்வார்
வரிசையலிபுலியே மன்னவரேநீருமிப்போ
பிரிசமுடனெடுநாள் போயங்கேதானிருந்தால்
வாடிமெலிந்திடுவேன் வள்ளல்புலியாலையிலுல்
நாடிப்போயொருநொடியில் நாட்டமுடன்வாருமென்றார்
நல்லதென்றுசொல்லி நாட்டமுடனேயலியார்
வல்லோனருளாலே வருவேனென்றுதானுரைத்து
விடையதனைவாங்கியலி மேலோன்நபிமுன்வந்தார்
தடையறவேவந்துநபி தாள்பணிந்துமேதுசொல்வார்
தாலிகட்டக்கூறை மகர்த்தான்முதல்கள்தாருமென்றார்
அலியாருரைக்க வாலநபிதாமுஞ்சொல்வார்
இப்போதலிபுலியே விறையோன்கிருபையினாற்
செப்பமுடன்நீர்கேட்ட திரவியத்திற்குப்பதிலா
இன்றுனக்குக்கேளு மிறையோன்புலியலியே
சென்றுகூசாத்தன்னனிருந் சிறந்தவொருரொட்டியையும்
கொண்டுபோய்க்கொடுநீர் குறித்தமகர்தனக்கு
என்றபோதேயலியா ரெழுந்துமேரொட்டியுடன்

(அலியாரெயமன்பதியில் மணமுடிக்கப்போகுதல்.)

வாக்கின்படிகூசாவெடுத்து வள்ளல்நபிதாள்பணிந்து
தாக்குடனேசென்றார் தானேயலிபுரவியின்மேல்
அந்தவெமன்ராச்சியத்தி லசரொகுத்திற்போயினரோ

சிந்தைமகிழ்ந்து சிறந்ததொருவீதியெல்லாம் *
பெண்கூறியேவருவார் பெரியோனருளாலே *
விண்டுசிதானெழும்ப விசையாய்நடந்துசொல்வார் *
காசிபணமுமில்லை கைமுதலுந்தானுமில்லை *
வீசுமுடைமானமில்லை வேண்டுமுதற்றானுமில்லை *
கூசாத்தண்ணிரொட்டிக்குங் குறித்தமகர்தனக்கு *
ஆசாரமாகப்பெண் ணூருங்கொடுப்பதுண்டோ *
என்றுதெருவீதியெல்லா மேழையவள்பெண்கேழ்க்க *
அன்றுதெருவீதியிலே யனேகம்பேர்கூடிசொல்வார் *
மதியாமற்பெண்கூறி மணமுடிக்கவந்ததினால் *
விதிவந்துமுடிந்திடுங்காண் வேறுதெருக்கேகுமென்றார் *
போகுமென்றுசொல்லவவள் பெரியோனுதவியினால் *
ஏகிமறுதெருவில் யேழையவள்பெண்கேழ்க்க *
அத்தெருவிலுள்ளோ ரப்படியேசொல்லிடுவார் *
உற்றதொருவீதியெல்லா முண்மையவள்பெண்கேட்டு *
வந்தாரரசன்மகள் மாளிகைக்குமுன்னாக *
எந்தனுக்குப்பெண்கொடுப்போ ரிங்குமுண்டோவென்றுரைப் [பார்
அப்போதுதாதியர்க ளனேகம்பேரோடிவந்து
செப்பமுடன்பார்ப்பார் சேராய்ப்புலியவளை *
அதிலேயொருதாதி யரசன்மகள்தன்னிடம்போய் *
மதியைப்போல்மயிலனமே மங்கையரேநீர்கேளீர் *
பெண்கேட்டுவந்ததொரு புத்தியுள்ளமன்னனைப்போல் *
எங்கும்தாம்கண்டதில்லை யிறையோனைவிவா[illegible] *
வளையல்விற்கவந்ததொரு மன்னனைப்[illegible]ற்காணு[illegible]தென்றாள் *
இளமையுள்ளராஜகன்னி யிதுவிபரங்கேட்டவுடன் *
தானுமங்கேயோடிவந்து தயவாகப்பார்த்திடுவாள் *
பார்த்தரசன்மகளார் பாங்காய்மனதிலெண்ணி *
வேற்றுமனிதரல்ல வேங்கையலியாமெனவே *
அலியாரென்றேயறிந்து மாண்மனையினுள்ளழைத்து *
நலியாமற்றாதியர்கள் நளினமலர்மெத்தையிட்டு *
மெத்தையின்மேல்வந்திருக்க மெல்லியருந்தானுரைத்தார் *
சித்தமகிழ்ந்தலியார் சென்றிருந்தாரப்போது *
பப்பாத்தியாரும் பாங்காகவேதுசொல்வார் *
இப்போதுநீரு மிங்குவந்தகாரியமேன் *
என்றவுரைகேட்டு யேகனலியேதுரைப்பார் *
இன்றுவந்தகாரியந்தா னியம்புவேன்கேண்மயிலே *
காசிபணமுமில்லை கனத்தமுதல்சேனையில்லை *

கூசாதீரொட்டியுமகராய்கொடுப்பேனுன்பெண்டனக்கு
இதுதனக்குச்சம்மதித்தால் யேகனுதவியினால்
ததியாய்மணமுடிக்கத்தான்வந்தேன்பெண்ணேயென்று
சொன்னமொழிகேட்டுத் தோகைமனமகிழ்ந்து
நன்னயமதாக நங்கையருஞ்சம்மதித்து
நானுமக்குப்பாரியென்று நவின்றமகள் சரியென்றுந்
தானுமலியாருஞ் சம்மதித்திருக்கையிலே
அந்தமொழிசொல்ல வரசன்மகள் தன்னுடைய
மந்திரிமாரையழைத்துவாருமென்றார்தாதியரை
தாதிகளோடி தானழைக்கமந்திரிகள்
நீதியுடன்வந்து நின்றதபுசெய்தார்கள்
மந்திரிகளைப்பார்த்து வகைவிபரஞ்சொல்லி யெனக்குக்
கப்பமிடும்ராசருக்குகனவோலையனுப்புமென்ன
ஒப்பஞ்செலுத்திடுவோர்க் கோலைவிட்டாரம்மானே
அந்தமொழிகேட்டு அரசரெல்லாந்தானெழுந்து
வந்தாரலைகடற்போல் வான்பரிகள்சேனையுடன்
அரசரவர்க்கு மாண்மனையுந்தானியற்றிப்
பிரிசமுடனிருந்தார் பெரியோனுதவியினால்
அலியாரிருக்கவொரு வரண்மனையுந்தான்கொடுத்துக்
கலியாணச்சோடினைகள் கட்டுமெட்டாய் தான்கொடுத்தார்
நாட்டிலுள்ளபெரியோரும் நல்லவுலமாக்களுமாய்
கூட்டினார்பந்தற்கால் குணமாய்ப்பவளத்தினால்
பந்தற்கால்தன்னைப் பரிவரணத்தினத்தால்
வித்தைவித்தையாக விசித்தமாய்வேலைசெய்து
எல்லோருங்கூடி இயல்புடையபாத்திகாவை
நல்லாகவேயோது நாட்டினார்பந்தற்கால்
பொன்னாலேவிட்டம் பொருத்தினாரந்நேரம்
நன்னயமாய்மேற்சிகரம்நாட்டினார்பந்தலுக்கு
சந்திரனைப்போலொளிவு தான்றுலங்கும்பந்தலெங்குங்
கந்தமலர்ச்செண்பகமுங் கமுகமரமுநாட்டிக்
கட்டினார்பொற்சரிகை கனகரத்நப்பந்தலிலே
அட்டதிசையோர்மகிழ வலங்கரித்தார்பந்தல்தன்னை
கண்டவர்களெல்லாங் களிகூறப்பார்த்தனரே
கொண்டாடிவதிசயத்தைக் கொற்றவர்கள்தான்மகிழ்ந்தார்
அலியார்மணக்கோலமகமகிழ்ந்துபார்க்கவென்று
மலிவாயரசரெல்லாம்வந்திருந்தாரவ்வேளை
ஆலமிகப்புகழு மலியாரிதுநினைந்தார்

தாலியுடன்கூறையுந் தருமானதிரகமெல்லாம் *
வலியவெனக்கேட்டால்வல்லவனேயேதுசொல்வேன் *
என்றலியாரு மிறையவனைத்தான்புகழ்ந்தார் *
அன்றுசிபுரியிலே யாண்டவனுங் கூவிச்சொல்வான் *
சொர்கந்தனிலிருக்குந் தய்யகுருலியரை *
வர்க்கமுடனுற்றில் மணமாய்த்தலைமுழுகி *
பட்டுடுத்திநல்ல பலபணிகள்தான்பூண்டு *
திட்டமுடன்குருலியரைச் சேரவேதான்கூட்டிச் *
அரசன்மகள்தனக்கு மன்பாகச்சோடினைகள் *
விரைவாய்ச்சொர்க்கமதில் வேண்டியதெலாமெடுத்து *
தாலியுடன்கூறை தருமானவாசங்களும் *
காலாழிமிலி கைவளையல்மோதிரமும் *
மைக்கூடுஞ்சிப்பு மற்றுமுள்ளபாவாடை *
கைக்குபாகுபந்துங் கனகரவுக்கைகளும் *
நடைக்கழகாயிருக்கும் நன்னயத்தின்பாடகமும் *
இடைக்கியுகந்த யெழிலொட்டியாணமுடன் *
சிலம்புடனேகூந்தலுக்குச் சிறந்தசுட்டிதானெடுத்துத் *
துலங்கநல்லவாலாத்தித் தோகையர்கள்தனைக்கூட்டி *
இத்தாதிபோகமதா யெமன்பதிக்கனுப்புமென்ன *
கத்தனுரைத்திடவே கனமானசிபுரையிலும் *
கட்டும்பணிகளெல்லாம் கணக்கிலடங்காதெடுத்து *
திட்டமுடன்வானவர்க்குரைக்க சிறந்தபேர்லட்சமுடன் *

எமன்பதிக்கி வானவர்வந்து அலியாரிடம் வரிசைப்பணிகள் கொடுக்குதல்.

சொர்க்கமணைத்துடனே சொகுசாயலங்கரித்து *
வர்க்கயெமராச்சியத்தில் வந்தார்கள்வானோர்கள் *
சங்கையுடனலிமுன் தான்போயியெல்லோரும் *
மங்களமாய்ப்பணிகளெல்லாம் வள்ளலலியிடங்கொடுத்தார் *
வாங்கியலியாரும் வல்லவனைத்தான்புகழ்ந்து *
பாங்காயிருக்கையிலேபார்புகழும்வானோர்கள் *
ஏழையலியாரிருக்கு மின்பமுள்ளமாளிகையைச் *
சூழவலங்கரித்தார் சொர்க்கப்பதிபோலே *
அந்தப்படியே யரசன்மகள்மாளிகையுஞ் *
சிந்தைமிகுமந்திரிகள் சிறப்பாலங்கரித்தார் *
அந்நகரவீதியிலே யங்குள்ளகுடிகளெல்லாஞ் *
சொன்னமயமாகச் சோடித்தார்வீதியெங்குஞ் *

பச்சையிலைத்தோரணங்கள் பாங்காகக்கட்டிவைத்து *
இச்சையுடன்யாவர்களு மினிதாகவீற்றிருந்தார் *
சங்கையுடன்தேசமெங்குந் தானேயலங்கரித்துப் *
பொங்கமுடன்யாவர்களும் புகழ்ந்தேமகிழ்ந்திருந்தார் *
அந்நேரங்கோவரசனன்புடனேயீன்றெடுத்தக் *
கந்தியருந்தோழியுடன் கருத்தாகவேதுசொல்வார் *
வாகாயலியாரை மணக்கோலமேகொண்டு *
தாகமுடனெவருகத் தான்போய்நீசொல்லுமென்றார் *
சொன்னமொழிகேட்டுத்தோகையர்களோடிவந்து *
மன்னரலியிடத்தில் மகிழ்வாகச்சொல்லியபின் *
அலியாருமப்போ தன்பாகத்தலைமுழுகி *
வலியோனருளாற்பணிகள் வகைவகையாய்த்தானணிந்து *
துல்துல்பரியேறிச் சுரரொடெல்லாருஞ்சூழ *
வல்லோனருளாலலியும் வந்தாரேயூர்கோலம் *
பேரிகைடம்மானம் பெரியதவல்முரசும் *
பூரிகைமல்லாரி புதியதவண்டைகளும் *
நாகசுரந்தித்தியுடன் நற்கோணக்கொம்புகளும் *
பாகமுடன்சங்கீதம் பாடிவரப்பாவலர்கள் *
மத்தளங்கைத்தாள மற்றுமுள்ளவாத்தியங்கள் *
பத்தியுடன்மாதர்களும் படியேயாடிவர *
இந்தவிதமாக வேகனலிபவனிவர *
அந்தநகருள்ளோர் யாவர்களுமேதுசொல்வார் *
வந்தாரொருவராய் வாகுடனேயேழையைப்போல் *
இந்தப்புதுப்பிள்ளை யாவர்களுமறியாமல் *
நல்லவர்க்கும்பெண்ணு நாம்கொடுக்கமாட்டோமென்று *
சொல்லிவிட்டோமெனவே தோகையருமன்னவரும் *
அரசன்மகளையிவர்க் காண்டவனமைத்தானென்று *
பிரிசமுடனுரைத்துப் புகழ்ந்தாரனைவர்களும் *
அப்போதலிபவனிவர வரசன்மகள்தான்பார்த்துத் *
தப்பாவிறையோனுந் தானுதவிசெய்தானென்று *
சிந்தைமகிழ்ந்திருந்தார் தேன்மொழியாரப்போது *
வந்தமலக்குகளும் வல்லோன்புலியலியும் *
ஜென்னத்துமேளம் சிறப்புடனேதான்முழங்க *
விண்ணதிருடம்மானம் மேகத்திடிபோல்முழங்க *
தேர்வாணமதிர்வெடிகள் ஜெகமெங்குமுழங்கிவரப் *
பார்புகழுமத்தாப்பு பகல்வத்தியேற்றிவர

பேரிகைசத்தமது பெருவானத்திடிபோலே
வாரிமலையதிர மண்ணுவிண்ணுந்தானதிர
பேறுயெமன்பதியிற் பெரும்வெளிச்சமாகிடவே
ஊர்கோலம்வந்தார்கா ணுலகமெலாந்தான்றிய
கொண்டுவந்துவிட்டார்கள் கோலமணப்பந்தலிலே
அன்றுமணவறையி லரசுபுலிவீற்றிருந்தார்
வந்திரங்கியேயிருந்த வானவருங்கூராணியரும்
இந்தவுலகுதனி லிருக்குமனிதரைப்போல்
கோவராசன்பெற்ற குறித்ததொருகன்னியர்க்கும்
பாவனையதாகப் பாங்காய்வரிசைதனை
ஏத்தினார்வானவர்க ளேகனருளாலே
பாந்தமுடன்பட்டுகளும் பணிவகைகள்தானெடுத்து
வந்தாரொருமனதாய் மன்னன்மகளரண்மனைக்குள்
இந்தப்புதுமையெல்லா மேற்றிழைபார்தான்பார்த்து
வல்லோனெனக்கு வரவிட்டவரிசையென்று
நல்லநேரத்தில் நலங்கிட்டுத்தலைமுழுகி
பட்டுடுத்திமையிட்டுப் பாங்காய்ப்பணிபூண்டு
இட்டமுடன்தானே யிருக்குமந்த வேளையிலே
அப்போதேயாண்டவனு மறுனாவாள்மலக்குகட்குச்
செப்பமுள்ளசிபுரீயிலுஞ் சேர்ந்தலூன்மலக்குடனே
நாலுமலக்குகளும் நாட்டமுடன்றானிறங்கி
ஆலநபிமருக ரலியாரவர்தனக்கும்
வலியபெமன்ராச்சியத்தில் மன்னன்மகள்தனக்குங்
கலியாணமிகமுடித்துக் கடுகவேவாருங்களென்றான்

அல்லாவுரைப்படி நாலுமலக்குகளிறங்கி யலியாருக்கும்
பப்பரத்தியாருக்கும் நிக்காமுடிக்குதல்.

என்றிறையோனுரைக்க வெழுந்தார்கள்நாலமலக்கும்
அன்றுயெமராச்சியத்தி லலியிருக்குமணவறையில்
வந்துயிறங்கினார்கள் வானவர்கள்நால்வர்களுஞ்
சிந்தைமகிழ்ந்து சிறப்பாயலிதமக்குக்
கொத்துபாவோதினார்கள் கோமானருளாலே
உத்றதொருநிக்காவையுகப்பாயெழுதினார்கள்
எழுதிமுடித்தபின்பு யேகன்புலியலியை
பழுதுவினைவாராமற் பாங்காயிருமெனவே
சுந்தரியிருக்குங் கநகரத்னமாளிகைக்குள்
அந்நேரமேயலியை யன்புடனேகூட்டிசென்று

மங்கையிடகரத்தை மன்னரலிதான்பிடிக்க
துங்கமுடன்வானோர்கள் சோபனமுங்கொண்டாட
வானவர்குராணியரும் வாழ்த்திமறைந்தனரே
தானலியுமங்கையருந் தம்பிரானைத்தான்புகழ்ந்து
அன்றலியாரு மன்புடையதேவியரும்
உண்டுமகிழ்ந்து வுகந்திருந்தாரம்மானை
அலியாருந்தேவியரு மகமகிழ்ந்துமப்போது
வலியபெயமராச்சியத்தில் வாழுங்குடிகளுக்கும்
உற்றபெரியோர்க்கு முண்மையுள்ளபாவலர்க்கும்
மற்றுமுள்ளராஜாக்கள் வந்தபடைகளுக்கும்
பூரணமாகப் போசனங்கள்தானளித்துத்
தாரணியோர்களுக்குந் தாம்பூலமுங்கொடுத்து
உகந்திருக்குநாளையிலே யுண்மையலியாரும்
அகமகிழ்ந்துதேவியுட னன்புடனேதானிருந்தார்
அதிகப்பிரியமுட னகமகிழ்ந்திருவருமாய்
பதிவாகக்கூடிப் பாங்காயிருக்கையிலே
நாடியலியாரும் நாயகியைப்பார்த்துரைப்பார்
நீடியமல்தரிக்கும் நிற்னயமாயுன்வயிற்றில்
தரித்தவமதுந் தாஸ்பத்துமாதஞ்சென்று
பிரித்துவிறையோனருளாற் பிள்ளைதனைப்பெற்றிடுவீர்
பிறந்தபிள்ளையாணுகில் பெயரமைக்கத்தான்கேளீர்
சிறந்தமுகம்மதுநபியாவா வென்பாய்ச்சேயிழையாளுல்
பாத்திமாவென்று பரிவாகப்பேரிடென்று
எற்றமனைவியரு மின்பமுடன்சொல்லிடவே
அன்றுவரசியரு மன்புடனேநல்லதென்றார்
ஒன்றாயிருவருமாயுகந்திருக்கும்வேளையினில்
அப்போதுகங்கு லகன்றுவிடிவந்தகுத்
தப்பாமற்கோழி தானுமங்கேகூவிடுமாம்
கூவினசத்தங் குதாயலியுந்தான்கேட்டு
ஆவலுடன்தேவியைப்பார்த் தன்புடனேபயணமென்று
சொன்னவுடனே தோகையருந்தானெழுந்து
தன்னயமாவிடைகொடுத்து நாயன்றனைப்புகழ்ந்தார்

(அலியார் மதினமாநகர்போகுதல்.)

கதியருள்வோன்கிருபையினுல் காரிகையார்விடைகொடுக்க
மதினந்தனைநோக்கி வள்ளலலிதானெழுந்து
நடந்துமலிபுலியார் நாட்டமுடன்பசிரொகுத்தில்
படர்ந்தபுகழ்மதினத்துப் பள்ளிதனில்வந்தனரே

வந்தவலிபுலியார் வல்லோன் றனைத்தொழுது
அந்தமுள்ளமாமனு ரடிபணிந்துதாமுரைப்பார்
சென்றுமணமுடித்துச் சீருடனேவந்ததெல்லாம்
அன்றுநபியார்தமக் கன்புடனேதானுரைத்தார்
அப்போதேயாலநபி யகமகிழ்ந்துதானிருக்கத்
தப்பாதலிபுலியுந் தாமிருக்குநாளையிலே

பப்பரத்தியார் பீவியவர்கள்வயிற்றில் முகம்மதுகனிபாவாவுதித்தல்.

அந்தவெமராச்சியத்தி லரசன்மகள்கெற்பமுண்டாய்ப்
பந்தமுடனேபத்து மாதமுந்தான் சென்றபின்பு
ஆண்பிள்ளையேயொன் றன்புடனேபெற்றனரே
வான்புவியைப்படைத்த வல்லவனருட்படிக்கி
பாரமுள்ளகூராணி பண்புடன்பிள்ளையையெடுத்துச்
சீர்பெருகுஞ்சொர்க்கமதிற் சென்றமுர்தமுங்கொடுத்து
சுவர்க்கநதியி[illegible]ப்பதொருநீராட்டி
பவர்க்கமுடன்றொப்புளு மன்[illegible]னேதான்கொய்து
சுன்னத்துமிட்டுத் துடக்கொன்றுமில்லாமற்
கண்ணுக்குமைய[illegible]மிட்டுக் க[illegible]தூரிதான்பூசி
வைத்துமங்கேதா[illegible]ருந்தார் வாகுடன்கூராணியப்போ
உற்றவரசன்மக ளுகந்து[illegible]னபிள்ளைதனை
காணுமதிகலங்கிக் கனிசலிப்பாக
வேணுமென்றதாதியர்கள் விரைவாகப்பார்த்திடவே
அரசன்மக[illegible]ப்போ தாலடவனைத்தான்புகழ
விரைவாயிறையோனைநிந்து விண்ணவனைத்தானழைத்துச்
செப்புவானப்போது சீர்பெருகும்பிள்ளைதனை
இப்போதெடுத்து வியலானராசன்மகள்
கையிற்கொடுத்துக் கடுகவேவாருமென்றான்
வையம்புகழும் வல்லகூராணியர்கள்
இளமைமடவார்க ளெல்லோருந்தான்கூடி
குழந்தைகொடுப்பதில்லைக் கோமானேயென்றுரைத்தார்
வல்லவனேநாங்களுந்தான் மதலைக்கமுர்தங்கொடுத்து
நல்லதிந்தபிள்ளைதனை நாங்கள்வளர்ப்போமென்றார்
அப்போதுநாய னகமகிழ்ந்துயேதுசொல்வான்
தப்பாதுபுவியிற் றாய்வளர்க்கவேணுமென்றான்
என்றுரைத்தபோது யின்பமுள்ளகன்னியர்கள்
அன்றுமலக்குகையி லன்புடனேதான்கொடுக்க

வாங்கியேயானவரும் வல்லோனருளாலே *
தாங்கியரசன்மகள் தன்மடியில்வைத்தனரே *
வைத்தசிறுபிள்ளைதனை மங்கையரும்பாராமல் *
சித்தமிகத்திகைத்துத் தியங்குகின்றநேரமதில் *
அன்புடனேயானவரு மழகுள்ளமதலைதனைப் *
பண்புடனேயப்போ பையக்கிள்ளிவிட்டகன்றார் *
தடையறவேபிள்ளையது தாங்காமலேயழுக *
அடையலர்கள் தான்பணியு மரசன்மகடன்செவியில் *
கேட்டுமெங்கேபிள்ளைதனைக்கிருபையுடனேயெடுத்து *
தாட்டாண்மையாகத்தான்மார்பிற்றணைத்து *
பாலமுர்தமூட்டிப் பாங்காய்வளர்த்திடுவார் *
சாலவேதொட்டிலிட்டுத் தாமேதாலாட்டிடுவார் *
இன்னுமுலகுதனிலேவரு மெடுத்துப்போவாரென்று *
அன்னையருந்தான்பயந்துமன்புடனேமைந்தனுக்கு *
பொன்னூலாசமைத்துப் புத்திரனையங்குவைத்து *
மின்னாரனைவர்களை மேற்காவலாகவைத்து *
இந்தப்படிவளர்த்தா ரிறையோனருளாலே *
அந்தமுள்ளமங்கையரு மன்புடையமைந்தருக்கு *
நீதமுடன்பெயரும் நிச்சயமாய்வைப்பதற்கு *
வேதவேதியருக்கும் வெண்பொற்பொருட்கொடுத்து *
முன்னுளவியுரைத்த முறைமையதுதப்பாமல் *
இந்நாள்முகம்மதுகனியாரா வென்றுமேபெயருமிட்டாள் *

(முகம்மதுகனிபாவாவை பள்ளிக்குவைத்தல்.)

வளர்ந்தசிறுபிள்ளையது வயதமைந்தானபின்பு *
குழந்தைதனைப்பள்ளிக்கு வைத்தாரேகோதைநல்லார் *
பள்ளிக்குவைத்துப் பரிவாகவோதையிலே *
பிள்ளையுமப்போ பெரிதுவயதாகி *
ஒருமந்தநாளையிலே வொக்கவரும்பிள்ளையெல்லாம் *
ஆதியவிமனை யப்போதுபார்த்துரைப்பார் *
தந்தையறியாத தறுதலியனென்றுசொல்லச் *
சிந்தைமிகக்கலங்கிச் சேதியைநாம்கேட்போமென்று *
அப்போதவிமகனு மன்னையருகில்வந்து *
தப்பாதமாதாவேதான் கேளுமொருவார்த்தை *
பள்ளிதனிலோதும் பரிவானபிள்ளையெல்லாந் *
தள்ளியிருந்தீயுந் தகப்பனில்லாப்பிள்ளையென்றார் *
அந்நேரமரசன்மக ளானதொருபைங்கிளியார் *

தன்மையாய்மைந்தனுக்குத் தானுரைப்பாரம்மானே
மதினகரிருக்கும் மகம்மதனார்தன்மருகர்
அதிகவரம்பெற்ற வலியாருன்றந்தையென்றார்
அந்தமொழிகேட் டன்புடையதாயேநான்
தந்தைதனைப்பார்த்துவரத் தாரும்விடையெந்தனுக்கு
தாரும்விடையென்றுரைக்கத் தாயார்மனமகிழ்ந்து
வாருஞ்சிறுபிள்ளாயேநீவல்லோனேமகனே
இன்னுஞ்சிலநாளிருந்து யிசைந்தமனம்பொறுத்துத்
தன்மையாய்ப்போவென்றுதாயாருரைத்திடவே
உரைத்தமொழிகேட் டுண்மையுள்ளபிள்ளையுந்தான்
கருத்தாய்மிகவெழுந்து காதலுடன்றான்வணங்கி
விலக்கவென்னைவேண்டாம்நீ வெற்றியுள்ளமாதாவே
தலத்திலுள்ளோர்புகழும் தம்பிரானெந்தனுக்கு
உதவிமிகவுமுண்டு வுண்மையுள்ளமாதாவே
இதமாகப்போய்வருவே னிப்போதுமெந்தனுக்கு
தடைசொல்லாமல்நீர் தாமென்னையனுப்ப
விடைதாருமென்றுசொல்ல வெற்றியுள்ளதாயுமப்போ
ஆதியருளுண்டென் றவர்மனதிற்றானுமெண்ணி
ஏதுவேண்டுமோமகனே யிப்போதுமெந்தனுக்கு
சேருமகனேயெனக் கிருபையுடன்றான்கேட்பார்
வாருடனேபுரவியுந்தான் வகையாகத்தாருமென்று
இந்தவிதமாய்க்கேட் டிருக்குமந்தவேளையிலே
அந்தமுள்ளநாய னருளாற்சிபுரையிலே
செப்பமுடனுரைத்துச்செப்புவான்சேதியொன்று
பப்பரத்தியம்மாள் பயன்றெடுத்தபாலருக்கு
சுவர்க்கந்தனிற்சென்று சுத்தமுள்ளவான்புரவியும்
அவர்கைக்கிசைந்த வாளதுவுங்கொண்டுசென்று
வெகுமதிப்புரவி விற்கவந்தசவுதாகிரிபோல்
தேசம்புகழவியார் தேவியார்முன்கொண்டுசென்று
விற்றுநீர்வாருமென்று மேலோன்சொல்வானவரும்
சற்றுமொழிதப்பாமற் றான்வந்தார்சொர்க்கமதில்
இலங்குமத்தவான்பரியை யெழிலாவலங்கரித்துக்
கலக்கமதுமில்லாமற் கசனம்விட்டுத்தானிறங்கி

சிபுரியில்சவுத்தாகிரிபோல்குதிரை
கொண்டுவருதல்.

வந்தாரேமாச்சியத்தில் வள்ளலவிதேவியர்முன்
சிந்தைமகிழ்ந்து சிறப்புடனேவிட்டனரே

விட்டபுரவிதன்னை வேந்தனிடந்தன்மகனுந்
திட்டமுடன்பார்த்துச் செப்பவில்லையென்றுரைத்தார்
அப்போதுவானவரு மனேகவில்லைசொல்லிடவே
செப்பும்வில்லைபோலே திரவியமுந்தான்குவித்து
வாங்கினார்வான்புரவி மைந்தனுக்குவேண்டுமென்று
பாங்காகப்புரவிதனைப் பரிவாகக்கட்டினபின்
அந்தப்புரவியுட னொருவாள்தனையுஞ்
சிந்தைமகிழ்ந்துக்கொடுத்துச் சிபுரையிலும்போய்மறைந்தார்
மறைந்தவுடனே முகம்மதுகனிபாவாவும்
சிறந்தகுதிரையையுந் திடவாளுங்கைப்பிடித்துச்
செப்பமுடன்றயாரின் சீர்பாதமேபணிந்து
இப்போதுநான்போக வெனக்குவிடைதாருமென
போய்வாருமென்றுசொல்லிப் புகழ்பொருந்துந்தாயாருந்
தூயமகன்றனக்குச் சொல்லுவாரோர்சேதி
மதினநகர்தனக்கு மகனேநீபோய்ச்சேர்ந்தால்
கதிரிலகுமத்துல்லா கனமானதன்[illegible]ளத்தில்
தலையுமுழுகாமற் றுனுமத்தவெ[illegible]ாமை
[illegible]லயாகக்கோதும்பை திற்கு[illegible]பயிர்தனையும்
குதிரையுமேமேய்மல் கொ[illegible]கையுடன்றனிருப்பாய்
அதிவேகமாகநடந் தந்நகர்தான்சேர்ந்து
திங்கள்தனையழைத்தச் செல்[illegible]நபிதாள்பணிந்து
சங்கையுடனுன்பாவா தனைக்கண்டிருந்து
வந்துசேரொன்று மாதாமகிழ்ந்துரைக்க
அந்தநல்லவேளையிலே யல்[illegible]வுதவியினால்

(முகம்மதுகனிபாவாமதினநகர் போய்ச்சேர்தல்)

நடந்துமதினம்போய் நாட்டமுடனேதுசெய்வார்
அடர்ந்தபத்துல்லாகுள[illegible]திலிறங்கிநீர்கலக்கி
நீராடிநிற்கயிலேநீதியுள்ளகோதும்பையில்
சாரிவந்தநற்குதிரைத் தானோடிமேய்த்திடவே
அப்போதலியாரு மன்புடனேதலைமுழுக
செப்பமுடன்மக்களுடன் சிறப்புடனேநீராட
கூட்டிவருகயிலே கோலமுள்ளவூரணியில்
நாட்டமுடன்வந்தலியார் நற்குளத்தைப்பார்க்கையிலே
எம்பதியிருந்துவந்த வெழில்முகம்மதுகநிபாவாவும்
அமைந்தகுளத்தை யவர்கலக்கிநின்றதுவும்
தா[illegible]ணியிற்கோதும்பையைத் தான்குதிரைமேய்ந்ததுவும்

ஊராணியினீரையெல்லா மொக்கக்குறைப்பினாலும்
கண்டுமலியார் கருத்தினிற்கோபமதாய்
இன்றுசிறுபயலே யிப்படியுஞ்செய்வாயோ
என்றுமலியாரு மிருவிழியுந்தான்சிவந்துக்
துண்டுபடவெட்டத் துணிந்துகைவாளெடுத்து
வெட்டுவாரப்போது வேந்தரலியாரும்
பட்டதொருவாளும் பந்துருகித்தாப்போலெழும்ப
பின்னுமவர்வெட்டப் பெருக்கமதாமுன்போல
வன்னமுள்ளவாளாலே மறுபடியும்வெட்டிடுவார்
வெட்டுகின்றபோததனை வேங்கைப்புலிமகன்வாளால்த்
தட்டியலியார்கரத்தைத் தன்கையினாலேபிடித்து
இருகரமுமொன்றாக விடதுகையினாற்பிடித்துப்
பெருக்கக்குதிலாதன்னைப் பின்னொருகையாற்பிடித்து
மன்னனுதவியினால் முகம்மதுகநிபாவாசொல்வார்
நன்னேர்மையுள்ள நபியிடத்தில்வாருமென்றார்
அப்போதலியாரு மன்புடனேதானடந்தார்
செப்பமுடனிருவர்களுஞ் சேர்ந்துவருகயிலே
ஆதிமுகம்மதரு மவர்கள்வருவதைப்பார்த்து
நீதியிறையவன்று னிப்புதுமைசெய்தான்காண்
என்றுமனதிலெண்ணி யிருக்குமந்தநேரமதில்
சென்றுநபியருகே சேர்ந்துவழக்குரைக்க
செகமகிழுநன்னபியுஞ் சிந்தைதனில்மகிழ்ந்து
முகம்மதுகனியாவாவை முகம்மதுதூக்கியேமடியில்
வைத்திருக்கவப்போது வல்லோனலியுரைப்பார்
உத்தவழக்குரைக்க வந்தேனுனுங்களுடனே
அந்தவழக்கை யன்புடனேகேளாமல்
வந்தசிறுவனைநீர் மடியில்வைத்தகாரணமேமன்
என்றலியார்கேழ்க்க விறசூல்நபிமகிழ்ந்து
அன்றலியார்தனைப்பார்த்தன்புடனேயேதுரைப்பார்
இப்போதுநீரோகி யின்பமுடன்நற்குளத்தில்
செப்பமுடன்றலைமுழுகித் திரமுடனென்னருகில்வந்தால்
பின்னேவுமக்குரைப்பேனென்று பெரியோனபியுரைத்தார்
அந்நேரவேளையிலே யலியார்குளஞ்சேர்ந்தார்
அந்தநேரமோகினு மன்புடனேவாங்குசொல்வார்
சிந்தைமிகமகிழ்ந்து தீனபியும்யார்களுடன்
ஐயோனசர்தொழுகத் துணிந்துமங்கேதானெழுந்து
பையநடந்துவந்தார் பாங்காகியகிணற்றில்

கூவல்திறக்காதிருக்கக் குறித்துமங்கேவந்தவர்கள்
ஆவலுடன்பார்த்து மங்கேதானின்றிடவே
அப்போநபியிறசூல் லனைவரையும்பார்த்துரைப்பார்
தப்பாதலிபுலியார் தான்வரவுமில்லையென
முகம்மதுகனிபாவாவு முக்கியமாயேதுசொல்வார்
செகம்புகழுநன்னபியே சிறப்புடனே கூவல்தனை
திறப்பேனுனென்றுசொல்லத் துய்யநபியேதுசொல்வார்
வரமருளுநாயன் வல்லபுலியல்லாமல்
மற்றொருவர்தான்திறக்க வல்லமைதானில்லையென்ன
உற்றபுகழுடைய வுண்மைநபிநீர்கேளும்
இந்நேரமேதிறப்பே னென்றிறத்தைப்பாருமென
நன்னபியுநல்லதென்று நாட்டமுடன்பார்த்துநிற்க
குன்றுமலைபோலே குறித்தவொருகல்லதனைச்
சின்னவிரலாற்றூக்கிச் சிறுவருமேபோட்டிடுவார்
போட்டபொழுதே புகழ்பெரியநன்னபியும்
நாட்டமுடனிப்புதுமை நாயனுதவியென்று
நபியுடனேயார்களுந்தான் நாடியொதுச்செய்திடுவார்
தபம்பெருகுமசபாக்கள் தாமொதுவுஞ்செய்திடுவார்
அப்போதியாவர்களு மசறுதொழுதனரோ
செப்பமுடனிறையைத் தொழுதிருக்கும்வேளையிலே
தலைமுழுகப்போயலியுந் தண்ணீர்தனைப்பார்த்தார்
கலங்கியிருந்ததினாற் கலங்கல்தெளியமட்டும்
இருந்தார்தெளிந்ததின்பின் னினிதாய்த்தலைமுழுகி
பொருந்துமனத்தோடு போந்தார்நபியிடத்தில்
அந்நேரவேளை யந்தக்கிணற்றனிலே
நின்னயமாய்நீரெடுக்க நீதியலிதான்பார்த்து
இந்தக்கிணறுமூடுங்கல்லை யெவர்கள்திறந்தாரென்று
வந்தலியார்கேட்க வள்ளல்நபிதானுரைப்பார்
செப்பமுடனலியே சிந்தையுடனீர்கேளீர்
தப்பிலாச்சொல்லுகிறேன் தானடந்தவாறதனை
முன்னுளிறையோன் மொழிந்தவுரைப்படியே
அன்னமெமராச்சியத்தி லங்கேநீர்போனதுண்டோ
குதிரையும்வாள்தனையுங் குறித்துநீர்போனதுண்டோ
அதிரநடந்தலியே யன்புடனேபெண்கேட்டு
நடந்துதெருவீதியெல்லா நாட்டமுடன்போனதுண்டோ
படர்ந்தபுகழிராசன்மகள் பாரியென்றுசொன்னதுண்டோ

அந்நேரம்வானவர்க ளன்புடனேவந்ததுண்டோ
மன்னனுதவியினால் மணமுநீர்முடித்ததுண்டோ
அந்தவரசியர்க்கு மருள்வார்த்தைச்சொன்ன துண்டோ
மைந்தன்பிறந்தால் முகம்மதுசனிபாவாவென்று
வெற்றியுள்ளபெயர்வைக்க விருப்பமாய்ச்சொன்ன துண்டோ
புத்திசொல்லிவந்தீரோயந்தப் புதுமையுள்ளபிள்ளையிது
இந்தநேரமோதுச்செய்ய விக்கிணந்நிறைதிறக்குதற்குத்
வந்துநீர்திறவாதால் முகம்மதுகனிபாவாதிறந்தார்
என்றுநபியுரைக்க வேகன்புலியலியார்
அன்றுமனஞ்சலித்து மன்பாகப்பள்ளிதனில்
புகுந்துக்கதவடைத்துப் புலம்பியங்கேதாமிருந்தார்
மிகவுநபியிறசூல் விளம்புவாரப்போது
மன்னனுதவியினால் முகம்மதுகநிபாவாநீர்
இந்நேரமுன்றந்தையரை யேகிதிரமையுமென்றார்
என்றுநபியுரைக்க விறையோனருளாலே
அன்றுமத்தக்குழந்தை யன்புடனேபள்ளியிலே
போய்நின்றுதந்தையரைப் பிரியமுடனேயழைக்கச்
சேயழைத்தசத்தந் தீரரலிதான்கேட்டு
பொங்கமுடன்வெளியில்வந்துப் பிள்ளைதனையெடுத்தணைத்துத்
திங்கள்தனையழைத்தச் செல்வநபியருகில்வந்தார்
அந்நேரவேளைதனி லாலநபிதாமுரைப்பார்
கன்னல்மொழியார்மகனைக் காதலுடன்கூட்டிக்கொண்டு
வீட்டுக்குப்போமென்று வேதாம்பர்தாமுரைத்தார்
தா[illegible]டிகமாய்ப்பிள்ளையைத் தான்றூக்கியேயப்போ
மு[illegible]ள்ளையசனுசைனை முன்னேநடத்திக்கொண்டு
வந்தாரலிமனையில் மனமுமகிழ்வாக
ஆல்நபிமகளா ரன்புடையபீவியரும்
பாலர்நடந்துவரப் பாங்காகத்தான்பார்த்து
வரிசையசனுசைனர் மண்ணில்நடந்துவரப்
பிரியமுடனேர்பிள்ளையைப் பின்னெடுத்துவந்ததென்ன
உற்றதொருபிள்ளைகளு முகந்துநடந்துவரப்
புத்திதமொழிப் போனீரோவாளரசே
என்றுரைத்தபோதே வேகன்புலியுரைப்பார்
நன்றிபிறகுமகளே நல்லதொருபீவியேகேள்
வல்லோன்வரவிடுத்த வான்புரவிதானுமது
நல்லயமராச்சியத்தில் நாட்டமுடன்கள்ளர்கொண்டு
போனபுரவியதைப் போய்த்திருப்பிவந்தவிதந்

தானுமறியீரோ தயவுடையபீவியரோ *
அந்தவரசன்மகளை யன்பாய்மணமுடித்து *
வந்ததறியீரோ வல்லோனபிமகனே *
அப்போதரசன்மக ளன்புடனேசூலாகித் *
தப்பாமற்பெற்றெடுத்த தன்குழந்தைதானலவோ *
அகமகிழவெந்தனுக் கரியபெரியோன்கொடுத்த *
முகம்மதுகனிபாவா யிவர்முகம்மதிறசூல்மகனே *
என்றபொழுதே யிறசூல்நபிமகளார் *
அன்றுவகமகிழ்ந்து மன்புடனேபீவியரும் *
நலமுடனேபலியாரிடத்தில் நன்மகனைத்தான்வாங்கிப் *
பலமுடனேதான்வாழ்த்திப் பரிவாகவந்நேரஞ் *
சிந்தைகளிகூர்ந்து சிராயொருமனதாய் *
வந்ததிருமகனை வாரிமடியில்வைத்தார் *
வள்ளலலியாரு மன்னனிறசூல்மகளும் *
உள்ளங்குளிர்ந்து முவப்பாகத்தானிருந்தார் *
அப்போகுழந்தையது மாண்டவனுதவியினால் *
தப்பாவயதுபத்துந் தானறியாப்பாலகனும் *
ஏகனுதவியினா லிருமூன்றுமாதமுமாய் *
வாகாகவங்கிருக்க வள்ளலலிபீவியரும் *
பழுதில்லாமல்வளர்த்துப் பாங்காயிருக்கையிலே *
வழுவில்லாமதினநகர் வாழுமலியார்தமக்கும் *
அரியபெரியோ னருளுதவிதன்னாலே *
சிறப்புமிகுந்திடுமாஞ் செல்வமதுமோங்கிடுமாம் *
இந்தப்படியா யிருக்கவிறையோனருளால் *
அந்தயெமாச்சியத்தி லரசனிடதன்மகளும் *
அப்போதுபிள்ளைதனை யன்புடனேமனதிலெண்ணிச் *
செப்பமுடனோர்வருடஞ் சென்றதினால்மனதுநொந்து *
வாடிமெலிந்து மதினநகர்தான்போக *
கூடும்படையுடனே கோதையருந்தான்போந்தார் *
வந்தாரரசன்மகள் மதினநகர்மாளிகைக்குள் *
முந்திநபிதாள்பணிந்தார் முன்னோனுதவியினால் *
மன்னனருளாலே வான்புரவிதானேறும் *
அந்நேரமலிபாத மன்புடனேதாள்பணிந்து *
நபிமகளார்பீவியிட நற்பதமுந்தான்பணிந்து *
சுபமிகுந்தபாத்திமுத் துஞ் சொல்வார்மிகவாழ்த்தி *
ஏகனுதவியினா லிருவர்களுமொருமனதாய் *
வாகாமனையில் வள்ளலலியக்களுமாய் *

இருந்தாரகமகிழ்ந்து யேகனுதவியினால்
பொருந்தியிருக்கப் போர்வேந்தன்றன்மகளும்
சேர்ந்தலியாருடனே செயிரண்டுமீன்றனரே
சார்ந்தகுழந்தையைத் தானேநபிமகளும்
ஆண்டவனுதவியினா லஸீனெனவேபெயருமிட்டார்
வேண்டியேமங்கையரும் விருப்பமுடனேநல்ல
பின்னுமொருமகனைப் பெற்றநிறைந்பிரியமுடன்
கன்னல்மொழிமானார்கள் ஹுசைனென்றும்பேர்கொடுத்தார்
மைந்தர்வளர்ந்திடவே மன்னரசன்றன்மகளுஞ்
சிந்தைமகிழ்ந்து சிறப்பாயிருந்தனரே
இருந்தவரசன்மக ளேழுவருடமிருந்து
திருந்தமவுத்தானால் சேர்ந்தார்கள்சுவர்க்கபதி
மவுத்தாயவர்போக மன்னனுதவியினால்
சவுத்தாயடக்கித் தானிருந்தார்யாவர்களும்
அடக்கிமுடிந்தவுடன் யாவர்களுங்கூடிப்
படைத்தோனருளாலே பாத்திசாயோதினரே
அலிநபியார்களு மசாபாக்களுமிருந்து
சீலமுடனலியார்தஞ் சீரானபிள்ளைகளும்
கூடியுமப்போ குணமாயிருக்கயிலே
வாடியிருக்குமுகம்மது கனியாவாவை
அலநபிதாமு மருகில்லழைத்துவைத்துச்
சீலமுடனே சிறந்திருக்கும்வேளையிலே
[illegible]ன்றுமெமராச்சியத்தி லரசருமில்லாததினால்
ப[illegible]டுள்ளமந்திரிமார் பலவிதமாயோசித்து
மதினநகாதனக்கு வாகாணகத்தெழுதி
தருமானதூதர்களைத் தான்போகவனுப்பினரே
கத்ததனைவாங்கிக் கருத்துடனேபாதைசென்று
வித்தகனார்வாழு மிருமதினஞ்சென்றனரே
சென்றவுடன்கத்ததனைச் சீக்கிரமாய்த்தானெடுத்து
அன்றுநபிகையிற்கொடுத் தன்புடனே நின்றனரே
கத்ததனைவாங்கிக் காரணமுகம்மதருஞ்
சித்தமகிழ்ந்து சிறப்புடனேயந்நேரம்
அலியார்தனையழைத்து மாலநபிதானுரைப்பார்
வலியவரசன்மகள் வைத்திருந்தமந்திரிமார்
நன்னேர்மையாயெழுது நாட்டமுள்ளகத்திதென்றும்
அந்நேரமலிகையி லன்புடனேதான்கொடுக்க
வாசித்துப்பார்த்தார்காண வல்லோனருளாலே

பூசித்தயெமராச்சியத்திற்பகஞ்சார்ந்தசீர்மையெல்லாம் *
பட்டத்தரசு பதிவாகவில்லாமல் *
திட்டமுடன்ராச்சியமுஞ்சிறப்பாயிருக்கவில்லை *
என்றெழுதிங்கத்ததனை யின்பமுடன்பார்த்தவுடன் *
அன்றலியாருடனே யாலநபிதானுரைப்பார் *
ஜெகமுழுதுமாளுதற்குச் சீறும்புலியேகேளும் *
முகம்மதுகலிபாவாவை முடிசூட்டிவைப்பதற்கு *
அனுப்பவேண்டுமென்றே யாலநபிதாமுமப்போ *
களித்துமிகச்சொன்னவுடன் கனமாகவந்தேசம் *
நல்லதென்றுசம்மதித்தார் நாயன்புலியலியார் *
வல்லபுகழிறசூல் மனமகிழ்ந்துதூதர்களை *
அழைத்துமிகநிறுத்தி யவர்கையிற்கத்தெழுதி *
தழைத்தயெமராச்சியத்திற் றன்சேர்ந்தசீர்மையெல்லாம் *
வாழுமரசர்முகம்மது கலிபாவாமுடிதரிக்கத் *
தாழ்வுடன்வந்து தான்சேரவென்றெழுதி *
ஈய்ந்தார்கள்கத்ததனை யெடுத்துமேதூதர்களும் *
வாய்ந்தயெமன்பதியில் வந்துமந்திரிகையீய்ந்தார் *
கத்ததனைவாங்கிக் கண்மேலேதானொற்றி *
சித்தமகிழ்ந்துடைத்துச் சிறப்பாகவாசித்துப் *
பார்த்துமனமகிழ்ந்து பாருலகிலரசருக்குக் *
கீர்த்தியுடன்மறுகத்துக் கிருபையுடன்றானெழுதி *
தூதர்கையிற்கொடுத்துச் சீக்கிரமாய்ச்சொல்லுமென்றார் *
காதலுடன்கத்ததனைக் கருத்தாகத்தானெடுத்து *
பாருலகின்ராசருக்குப் பாங்காகயீய்ந்திடவே *
சிருடனேபார்த்தரசர்சேர்ந்தபடைத்தான்கூட்டி *
வந்தார்கள்யெமன்பதியில் வல்லோனருளாலே *
சிந்தைகளிகூர்ந்தரசர் சேர்ந்திருக்கும்வேளையிலே *
மதின நகரமதில் முகம்மதிறசூலுடனே *
கதியிலகுமலியாருங் கனமானயாருகளும் *
முகம்மதுகனிபாவாவும் முக்கியவசபாக்களுடன் *
ஜெகமகிழுகின்ற சேனைபரியானையுடன் *
மேளதாளங்களுடன் மிகவாடம்பரத்துடனே *
ஆளுமிறையோனருளால் யாவர்களுந்தானெழுந்து *
நடந்துயெமராச்சியத்தில்நாட்டமுடன்போய்ச்சேர்ந்தார் *
அடர்ந்துவந்தராசர்களு மந்நகரமந்திரிகளும் *
வந்துநபியிறசூல் மலர்ப்பாதம்போற்றிசெய்தார் *
அந்த நல்லவேளையிலேயாலநபிதாமுரைப்பார் *

முகம்மதுகனிபாவிற்கு முடிசூட்டவேண்டுமென்று
அகமகிழுமந்திரிகட்கு மரசருக்குந்தானுரைத்தார்
அப்போதுமந்திரிகளு மரசர்களுந்தாமுரைப்பார்
இப்போதுமெங்களுக்கு மிதுவேசரியென்றுரைத்தார்
சரியென்றுரைத்திடவே தானவன் நபியிறசூல்
பரிவானபதிதனிலே பந்தல்களுந்தோரணமும்
சிங்காரமாகச் சிறப்பாயலங்கரித்து
மங்காதசந்திரன்போல் மண்டபமுந்தானியற்றி
மண்டபத்தினுள்ளே மணியாற்சிம்மாதனமுங்
கண்டவிடமெல்லாங் கனகரத்தினம்பதித்து
முகம்மதுகனிபாவாவை முகனையாச்சிம்மாதனத்தில்
பகையொருவரில்லாமற் பண்புடனேதானிருக்க
பட்டமதுகட்டப் படைத்தோனருளாலே
திட்டமுடனிராசாக்கள் சேரவேசூழ்ந்துநிற்க
ஆலநபியிறசூ லருகாகவேயிருக்கச்
சீலமுடன்யாருஞ் சேரவேவீற்றிருக்க
மற்றுமுள்ளவசபாக்கள் மனமகிழ்ந்துதானிருக்கக்
குற்றமில்லாவேசமுங் கூறிமிகவிருக்க
பாசத்துடனரசர் படைகளுஞ்சூழ்ந்துநிற்க
மாசில்லாமணிபோல முகம்மதுகனிபாவிற்கு
அட்டதிக்கும்போற்று முகம்மதிறசூல்நயினார்
பட்டமதுகட்டினார் படைத்தோனருளாலே
ஆமினல்லாவென் றன்பாய்த்துவாவோதியபின்
சீமைதனிலுள்ளரசர் சேரவேபணிந்துநின்று
கப்பமுங்கட்டிக்கனமாயிருங்களென்றார்
அப்போதரசர்களு மருட்படியேயாகுமென்றார்
முகம்மதுகனிபாவாவையு முதன்மையுள்ளமந்திரியும்
அகமகிழத்தானழைத்து மாலநபியேதுசொல்வார்
அட்டதிசைமுழுது மடர்ந்திருக்குங்காபர்களைத்
திட்டமுடன்கலிமாச்சொல்லித்தீன்விளக்குங்களென்றும்
ஆலம்படைத்த வாண்டவனருளாலே
சீலமுடனுண்டு சிறப்பாயிருங்களென்று
வாழ்த்திநபியிறசூல்வண்மையுள்ளயார்களுடன்
சூழ்ந்தவசபாக்களுஞ் சுற்றம்படைகளுடன்
மன்னர்நபியெழுந்தார் மதினநகர்போக
முன்னோனுதவியினால் முகம்மதுகனிபாவாவெழுந்து
அன்புள்ளநபியிறசூ லடிமலரைத்தான்பணிந்து

பண்பாயபுபக்கர் பாதமிகவணங்கி
ஆதியுமறுகத்தா வடிமலரைத்தான்பணிந்து
ஓதுமுதுமாருர்பாத முண்மையுடனேபணிந்து
தன்னுடையயாவா தக்கவலியார்பதத்தை
நன்னயமாகப்பணிந்து நலமாகநின்றிடவே
அலியார்மனமகிழ்ந் தன்புடனேதான்வாழ்த்தி
வலிவாய்ப்புலியாண்டு மகிழ்வாயிருமகனே யென்றார்
அந்தநல்லவேளையிலே யகமதிறசூல்நபியுந்
தொந்தமதாய்விடைகொடுத்துத் துரிதமாயெழுந்தனரே
மதினாநகர்நோக்கி வள்ளல்நபியாவர்களுந்
கதியாய்நடந்து கனமதினஞ்சேர்ந்தார்கள்
சேர்ந்தாரவனவர்களுந் திருமாளிகையிற்போ
சார்ந்தநபியிறசூல் தானவனருளாலே
ஆலமெங்குமோர்குடையிலன்புடனேதானுண்டு
சிலமுடன்றீன்விளங்கச் செய்திருந்தார்மதினபதில்
இந்தப்படியிருக்க வெமன்பதியையாளுகின்ற
மைந்தன்முகம்மது கனிபாவாமனமகிழ
மன்னர்களெல்லோரும் வந்துமங்கேதாள்பணிந்து
நின்னயமாய்க்கப்பம் நிலையாகக்கட்டிவர
ஆராய்ந்துவேத மருகேமுழக்கிடுவார்
வாரணங்கள்சேனைவகை வகையாய்ச்சூழ்ந்திடவே
முன்னரசரெல்லோரு முறையுடனேவீற்றிருந்தார்
மன்னர்துரைமார்கள்மனமகிழ்ந் தசூழ்ந்திருப்பார்
சேனையுடன்மந்திரிமார் சேரவருகிருக்க
மானையொத்தவிழிமடவார் மங்களமும்பாடிநிற்க
நாட்டியமாதர் நலமுடனேயாடிநிற்க
பாட்டுகள்பாடிப் பலகவிஞர்சூழ்ந்துநிற்க
ஆலாத்திகொண்டு மனேகம்பெண்களேந்திநிற்க
கோலரத்நவாலாத்திக் கோதையர்களேந்திநிற்க
ஜெகமுழுதும்வாழ்த்த சிங்காதனம்வீற்றிருந்து
மகுடமுடிதரித்து முகம்மதுகனிபாவாவும்
திட்டமுடன்[illegible]மாத் தீன்நெறியுந்தானோங்க
சட்டஞ்செலுத்தித் தானுலகமாண்டிருந்தார்
வானம்படைத்த வல்லவன்றன்னருளாலுந்
தீனெறிபயிற்றுஞ் செல்வநபிபொருட்டாலும்
மங்களமதாக வாழ்ந்திருந்தாரம்மானே
திங்கள்தனையழைத்தச் செல்வநபிமிகவாழி

யார்கள்மிகவாழி யசபாக்கள்தான்வாழி
பாரில்மாதர்போற்றும் பாத்திமாவவர்கள்வாழி
அலியார்பயின்றெடுத்த வசனுசைனார்தான்வாழி
மலிவானவம்பியாக்க ளவுலியாக்களும்வாழி
முக்கியவெமன்பதிவாழு முகம்மதுகனியாவாவாழி
தக்கப்புவியிற் றுனுள்ளோர்தான்வாழி
பப்பாத்தியம்மாளும் பண்புடனேமிகவாழி
செப்பமுடனிக்கதைசெய் செய்குமீராதான்வாழி
பாடிப்படித்தோர்வாழி பரிவாய்க்கேட்டோர்வாழி
தேடிப்பதிப்பித்தத் தீன்விளக்கவச்சுக்கூடம்வாழி
ஆமினல்லாயாமீன் யாறப்பலாலமீன்

பப்பரத்தியாரம்மானை

முற்றிற்று.